Registered at the G. P. O. as a Newspaper ★ விலைசதம் 20

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி — National Tamil Daily
மலர் 8 — இதழ் 138
பராபவ ஆனி 11 ரபி:அவ் 5 (17-6-66) சனிக்கிழமை

## மாநாடு இன்றைய நிகழ்ச்சிகள்

காலை 11 மணி தொழிலாளர் மகாநாடு இடம்: தியாகிகள் அரங்கு தலைவர் பி. சாமன் (இலங்கைத் தொழிலாளர் கழகம்). பேச்சாளர்கள்: ஜனுப் வை. எம். றசித், திரு. வ. பாலசிங்கம், ஜனுப் ஏ. உதுமாலெப்பை, திரு. பீதாம்பரம், திரு. க. துரைரத்தினம் (பா. உ), திரு. மு. ஆலாலசுந்தரம், திரு. க. சிவானந்தசுந்தரம்.

பிற்பகல் 2 மணி தமிழர் அரசியல் வரலாறு (30 ஆண்டுப் பத்திரிகைத்தொகுப்பு: இரா கனகரத்தினம் தம்பதிகள்.

கண்காட்சித்திறப்பு: திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் பிற்பகல் 2-30 மணி இலக்கிய மகாநாடு.

இடம்: உறுமப்புலவர் அரங்கு தலைவர்: திரு. செ. இராசதுரை, பேச்சாளர்கள் கவிஞர் நீலாவணன், ஜனுப் பக்கீர்தம்பி, வித்துவான் கமலநாதன், கவிஞர் காசி ஆனந்தன், பண்டிதர் க. பொ. இரத்தினம் (பா. உ.) கவிஞர் பாண்டியூரன் பிற்பகல் 5 மணிக்கு மாதர் மகாநாடு.

இடம்: பாடும்மீன் அரங்கு தலைவர்: திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம், பேச்சாளர்கள், திருமதி இராசபூபதி அருணசலம், செல்வி கலாமாணிக்கம், செல்வி நோ. இராசம்மா, செல்வி இ. நகருமணி, திருமதி ரா. தி. பிள்ளை, செல்வி

(4-ம் பக்கம் பார்க்க)

# அரசாங்க ஊழியருக்கு தமிழ், சிங்களம் அவசியம்

## பிரதமரை வரவேற்க சிறப்பானஏற்பாடுகள்

### திறந்தமோட்டார் காரில் ஊர்வலமாக அழைக்க ஒழுங்கு

### வீதிகள்தோறும் விழாக்கோலம்



கல்முனை, சனி

தமிழரசு மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக இன்று இங்கு வரவிருக்கும் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவுக்கு மிகவும் சிறப்பான முறையில் வரவேற்புகள் அளிக்க இங்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மட்டக்களப்பு விமானநிலையத்திலிருந்து கல்முனை தமிழரசு மகாநாட்டுக்கு பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா திறந்த காரில் அழைத்துவரப்படுவார்,

பிரதமர் இன்று மட்டக்களப்பு வந்து சேர்ந்ததும், அவர் ஆனைப்பந்தி பிள்ளையார் கோவிலில் நடைபெறும் விசேஷ பூஜை ஆராதனையில் கலந்து கொள்வார். இதனைப் பிரதமகுருக்கள் ஸ்ரீ வரதராஜக் குருக்கள் நடத்திவைப்பார்.

இன்று மாலை நாலு மணிக்கு விசேஷ விமானமூலம் மட்டக்களப்பை வந்தடையும் பிரதமரை அமைச்சர் திருச்செல்வம், மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. பி. காசிலிங்கம் உள்ளிட்டு எம். பி.க்களும் மற்றும் பிரமுகர்களும் எதிர்கொண்டு அழைப்பார்கள்.

இதனைத் தொடர்ந்து பிரதமர் திறந்த மோட்டார் காரில் கல்முனை மகாநாட்டுக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார். ஊர்வலத்தில் அமைச்சர் திருச்செல்வமும், மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. இராசதுரையும் கலந்துகொள்வார்கள். ஏராளமான மோட்டார்கார்கள் இந்த ஊர்வலத்தில் கலந்துகொள்கின்றன.

பிரதமர் டட்லி சேனநாயக்கா மகாநாடு செல்லும் வழிநெடுகிலும் அவரைக் கௌரவிக்குமுகமாக அலங்கார தோரணங்களும், விசேஷ பந்தல்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. பிரதமரை வரவேற்பதற்காகக் கல்முனை மட்டுமின்றி மட்டக்களப்பு தொடக்கம் கல்முனை வரையிலான இருபத்தைந்து மைல் நீளமான பாதை இப்பொழுது விழாக்கோலம் பூண்டிருக்கிறது.

## சாதி, மத, இன அடிப்படையில் சிறிதும் பிளவு வேண்டாம்

### தமிழ்ப் பல்கலைக் கழகம் முக்கியம்; தமிழரின்முன்னேற்றத்துக்கு விரிவான திட்டங்கள்

### கல்முனை மகாநாட்டில் டாக்டர் நாகநாதன் தலைமைப் பேருரை

கல்முனை, சனி

தேசிய அரசாங்கம் பதவிக்கு வந்தபின்னர் இந்தநாட்டு மக்களிடையே என்றுமில்லாத ஒரு ஐக்கியம் உருவாகிவிட்டது. இந்த ஒற்றுமையை மேலும் பலப்படுத்துவதற்கு எம்மிடையே எந்தவிதத்திலும் பிளவுகள் தலைதூக்கக் கூடாது குறிப்பாகச் சொல்வதென்றால் இந்தநாட்டு அரசாங்க ஊழியர்கள் அனைவரும் சிங்கள மொழியில் மட்டுமின்றி தமிழ் மொழியிலும் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டியது மிகவும் அவசியமாகும்.

நேற்றுக்காலை ஆரம்பமான தமிழரசு மகாநாட்டின் இரண்டாம்நாள் நிகழ்ச்சிகளில் தமிழரசுக்கட்சித் தலைவர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் தலைமைப் பேருரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார். அவர் தமது தலைமையுரையில் மேலும் கூறியதாவது:

தமிழரோ, சிங்களவரோ, பறங்கியரோ, முஸ்லிம்களோ, அல்லது இங்கு வாழும் வேறு எந்த இனத்தவரோ நாட்டின் எப்பகுதியிலும் சென்று கடமையாற்றுவதற்குத் தயாராகவிருக்கவேண்டும். இதற்கு இரு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருப்பது அவசியமாகும்.



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இந்தப் பத்தாவது தேசிய மாநாட்டிற் றிரண்டு நிற்கும் எம் கட்சிப் பேராளர்களுக்கும் ஏனைய தமிழரசுக் கட்சி உறுப்பினர்க்கும் எம்மை ஆதரித்து என்றும் எம்முடன் அணிதிரண்டு நிற்கும் எமது நலன் விரும்பிகட்கும் எமது அன்பழைப்பை ஏற்று இங்கு வந்திருக்கும் கௌரவம் மிக்க விருந்தினர்க்கும் எமது கட்சியின் சார்பில் நான் முதற்கண் எனது நெஞ்சார்ந்த நல்வரவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


இந்தப் பெரிய மாநாட்டிற்குத் தலைமை வகிக்க என்னை ஒருமனதாகத் தெரிவு செய்ததன்மூலம் கட்சி எனக்களித்த கௌரவத்தை நான் நன்கு உணருகிறேன். ஆனால் எமது சரித்திரத்தில் மிகவும் மலைப்பும்மனத்துடிப்புங்கொண்ட இக் கட்டத்தில் எமது தேசிய நிறுவனத்தை வழிகாட்டி நடத்தும் பெரும் பொறுப்பு என் தலைமீது சுமத்தப் பட்டிருக்கிறதென்பதை அதனிலும் மேலாக நான் உணருகிறேன்.

#### சாதனைகள்

பதினேழு நீள் வருடங்களாக—இலங்கைக்குச் சுதந்திரங்கிடைத்த நாட்தொடக்கம்—எம்மிடமிருந்து பிடுங்கப்பட்டுவரும் எமது தன்னுரிமையையும் அடிப்படை உரிமைகளையும் மீண்டும் பெறுவதற்கும் எமது தேசியத் தன்மதிப்பைப் பேணிக் கொள்வதற்கும் நாம் எமதனைத்தையும் அர்ப்பணித்து ஒரு நீண்ட போராட்டத்தை நடத்தவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டோம்.

பெருந்தொகையில் எமது இளைஞர்களும் இளம் பெண்களும் முழு இதயத்தோடு எமது இயக்கத்திற் சேரும்வரை அல்லது இறவன் தன்கருணையில் எமக்கு நிரந்தர ஓய்வு அளிக்கும்வரை நம்முள் எவரும் ஓயமுடியாது, ஓய்வு பெறவும்மாட்டோம்

(2-ம் பக்கம் பார்க்க)



தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி செல்வநாயகம் இன்று காலையில் தமிழரசுக் கொடியை ஏற்றி வைக்க மகாநாடு ஆரம்பமானது.

★கல்முனை தமிழரசு மகாநாடு சிறப்பு மலர்★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டால் வெளிநாட்டு மாணவரும் இங்கு வரமுடியும்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

திரு. வன்னியசிங்கத்தைத் தொடர்ந்து திரு. ஏகாம்பரம், திரு. இராசவரோதயம், திரு. கந்தையா ஆகியோர் இன்று நிரந்தர ஓய்வுபெற்றுவிட்டனர்.

### பண்புயர்ந்த தலைமை

எம்மைத் துன்புறுத்தியவர்களின் வெறியாட்டம் உச்சக் கட்டத்தை அடைந்தபோதும் எமது தேசியப் போராட்டத்தின் பொழுதும் நாம் எமது பரம அரசியல் எதிரிகள் மீது மனக்கசப்போ பகைமையோ காட்டியதில்லை என்பதையும் அதற்கு எமது பண்புயர்ந்த தலைமையே காரணம் என்பதையும் நான் இங்கு தவறற்ற பெருமையுடன் பொறித்துவைக்க விரும்புகிறேன். இதற்கு மாறாக எமது பெரும் கொள்கைகளிலிருந்து மயிரிழைதானும் பிசகாது நடந்துகொண்டும் அதே சமயம் கட்சியடிப்படையிலும் நாம் எம்மோடு உடனுறையும் சிங்களச் சகோதரர்களுடன் நட்புரிமையும் உடன்பாடும் தேடி அயராது உழைத்தும் வந்துள்ளோம்.

இவ்வாறு எமது நெஞ்சுறுதியாலும் உயர்வுள்ளத்தாலும் நாம் காலஞ்சென்ற பிரதமர் திரு பண்டாரநாயக்காவுடனும் அவரது அரசாங்கத்துடனும் 1957-லும் பின்னர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவுடனும் அவரது கட்சியுடனும் ஏப்ரல் 1960-லும் ஒப்பந்தங்கள் செய்துகொள்ள முடிந்தது. ஆனால் இவ்விரு சந்தர்ப்பங்களிலும் எமக்கு நம்பிக்கைத்துரோகம் இழைக்கப்பட்டுவிட்டது என்பது இப்பொழுது சரித்திரம். இத்துரோகத்தின் விளைவாக நாம் அனுபவித்த சோதனைக்கும் வேதனைக்கும் அளவில்லை. ஆனால் தமிழ் பேசும் மக்கள் எம்மீது வைத்த நம்பிக்கையைநாம் கடைசிவரை காப்பாற்றி எமது இலட்சியத்தை உறுதியுடன் பேணி நின்றோம்.

### கௌரவமான சமாதானம்

இன்று நிலைபரம் வேறு. நீதியிலும் நேர்மையிலும் முதிர்ந்த பற்றுள்ள திரு. டட்லி சேனநாயகாவின் தெம்பூட்டும் தலைமையில் நாம் ஓர் தேசிய அரசாங்கத்தை நிறுவுவதிற் பங்கு கொண்டு பெருமளவில் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தியுள்ளோம். இவருடைய பிரதம தளபதியான திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கடந்த ஒரு வருடமாக தாம் உரமும் உண்மையுங்கொண்ட ஒரு நண்பனென நிரூபித்துவிட்டார். இவருடைய ஆற்றலும், அறிவுத்திறனும் தேசிய அரசாங்கத்திற்குக் கிடைத்ததொரு பெருமுதலாகும்.

இருந்தும் உடன்காலத்தைப் பற்றி நான் மிக சொகுசாக வர்ணிப்பதோ எதிர்காலத்தைப் பற்றிக் கற்பனைக்கனவைத் தூண்டிவிடுவதோ முற்றிலும் சரியாயிருக்க முடியாது. அவ்வாறு நான் செய்வது எனது கடமையிற் தவறுவதாகும். நெஞ்சுறுதியுடனும், கட்டுப்பாட்டுடனும் நாம் ஆற்றவேண்டிய நொய்மையான பணிகளும் தாங்கவேண்டிய கஷ்டங்களும் மிகப்பல. நாம் தவிர்க்க வேண்டிய பொறிக்கிடங்குகளும்பல. அதன் பின்னர்தான் நம் சிங்கள மக்களுக்கும் தமிழ்பேசும் மக்களுக்குமிடையே அறிவார்ந்த கருத்திணக்கத்தின் அடிப்படையில் நீதி நிறைந்த நிலையான சமாதானத்தை ஏற்படுத்தும் எமது குறிக்கோளை அடைய முடியும்; இதன்மீதுதான் முற்றான பொருளாதார வளர்ச்சியையும் தேசியத் தன்நிறைவையும் நாம்காண முடியும்; இதுவொன்றின் மீதுதான் இலங்கை மக்கள் அனைவரினதும் செழிப்பையும் செல்வத்தையும் மனநிறைவையும் நாம் ஒரு பத்து வருடகாலத்துள் உறுதிப்படுத்தமுடியும்.

அரசியல் வனாந்திரத்திலும், நாட்டு மன்றத்து எதிர்க்கட்சிகளிடையேயும் நீண்டகாலவாக வாழ்ந்து வந்த நாம் இன்றைய தேசிய அரசாங்கத்தை நிறுவ உதவிய பொழுது இரண்டு எண்ணங்கள் எமது மனதில் மேலோங்கி நின்றன.

ஒரு கௌரவம் நிறைந்த கனவானுடனும் அவரது கட்சியுடனும் ஒரு கௌரவம் நிறைந்த கருத்தொருமைப்பாட்டை ஏற்படுத்திச் சிங்கள மக்களுக்கும் தமிழ் பேசும் மக்களுக்குமிடையே ஒரு கௌரவமான சமாதானத்தை நிறுவுவோம் என்பது ஒரு நோக்கம்.

## எமது தாயகம்

அமைச்சர்ப் பதவிகளை நாம் தேடி நிற்கவில்லை. அரசாங்கத்தில் நாம் தொடர்பு கொண்டுள்ளோம் என்பதற்கு அடையாளமாக குறைந்தபட்சம் ஒரு அமைச்சையாவது ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதைத் தவிர திரு. டட்லி சேனநாயகா எமக்களித்த அமைச்சரவைப்பதவிகளை நாம் ஏற்க மறுத்துவிட்டோம்.

அமைச்சரவைப் பொறுப்புக்களை நாம் ஏற்க மறுத்தமைகுறித்து பலதரப்பட்ட கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன. எமது இம்முடிவின் விளைவாக தம்மை அர்ப்பணித்துக்கொண்ட திறமைசாலிகளின் இயக்கவாற்றல் நிறைந்த சேவை நாடாளும் அரசாங்கத்திற்கு மறுக்கப்பட்டுவிட்டது என்பது இக்கண்டனங்களுள் சில சமயம் மிக முக்கியமானதாக விருக்கலாம். ஆனால் அந்தக்கட்டத்தில் நாம்அமைச்சர் பதவிகளை ஏற்றிருந்தாற் பொது மக்கள் அதைத் தப்பர்த்தம் செய்திருப்பார்கள். உயர்ந்த கொள்கைகளை அடித்தளமாக வைத்து நீண்டகாலமாக எதிர்ப்புக் காட்டி வந்தவர்களைத் திரு. டட்லி சேனநாயக்கா பதவி கொடுத்து விலைக்கு வாங்கிவிட்டார் என்று பலர் கருதியிருப்பார்கள். இவ்விடயத்தில் நாம் நடந்து கொண்ட விதம் காரணமாகச் சிங்கள மக்களுள் மிகப் பெரும்பகுதியினர் எம்மை மேலும் மதித்துத் தெரிந்து கொண்டார்கள் என்றே நான் நம்புகிறேன்.

உடனெதிர் காலத்தைப் பற்றி மிகுசொகுசாக வர்ணிக்க முடியாது என்று நான் கூறியிருந்தேன். தமிழ்பேசும் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையே இருக்கும் நிலைமையைத் தெளிவாகப் புரிந்து கொள்வதானால் அதன் பின்னணியை நாம் நேர்மையுடன் அலசிப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த நாட்டிற் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து வருவது ஒன்றே சிங்கள இனத்தின் பொருளாதாரத்திற்கும் மதத்திற்கும் கலாசாரத்திற்கும் அதனது பாதுகாப்பிற்கும் ஆபத்தாவது என்று பல வருடங்களாகச் சிங்கள மக்களுக்கு—குறிப்பாகச் சிங்களக் குழந்தைகளுக்கு—நாடகங்கள், புத்தகங்கள், பிரசுரங்கள்மூலம் போதிக்கப்பட்டு வந்திருக்கின்றது.

### அரசியல் சந்தர்ப்பம்

போதிய கல்விவாசனையற்ற, வஞ்சகமற்ற பெருந்தொகையான சிங்கள மக்கள் மனத்திற் சூழ்ச்சி வகுக்கும் அரசியற் சந்தர்ப்பவாதிகள் இந்தப் பொய்யான, உண்மையிலேயே நஞ்சுத்தனமான, படத்தைப் பொறித்து விட்டிருக்கிறார்கள். சேர்மனியைச் சுற்றிலும் பகைவர்கள்சூழ்ந்திருக்கிறார்கள் என்றும் சேர்மனியின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதானால் இப்பகைவர்களைவருடனும் போரிட்டுச் சாத்தியமானால் அவர்களைத் தனித்தனியே தோற்கடிக்க வேண்டும் என்றும் கணக்கிட்ட பிரசாரத்தின்மூலம் ஹிட்லர் சேர்மன் மக்கள் மனத்தில் வலுச்சண்டைச் சிந்தனையையும் போர்க்கோலத் தீயையும் வளர்த்துவிட்டான்.

அதேபோல எம்நாட்டிலும் தீவினை அஞ்சாத சில அரசியல்வாதிகள் மக்கள் மனதில் நஞ்சூட்டி வந்திருக்கிறார்கள். வடக்கே வட இலங்கையிலும் தென்இந்தியாவிலும் கிழக்கே மலேசியாவிலும் மேற்கே மோரிசுத் தீவிலும் சான்சிபாரிலும் கிழக்காபிரிக்காவிலும் தமிழர் வாழ்வதினால் நாற்புறமும் சூழப்பட்ட சிங்கள இனத்திற்கும் பௌத்த மதத்திற்குமே ஆபத்து ஏற்பட்டுவிட்டதென்று நாளும் பொழுதும் சிங்கள மக்கள் மனத்தில் வெறியேற்றி வந்திருக்கிறார்கள். வஞ்சகமற்ற ஏழைமக்கள் தமது மதத்திற்கும் நாகரிகத்திற்கும் ஆபத்துஏற்பட்டுவிட்டதென்று உண்மையிலேயே நம்புகிறார்கள். திரு பண்டாரநாயக்கா, திருமதி பண்டாரநாயக்கா ஆகியோரினதும் அவர்களது பழிகேடான நண்பர்களினதும் ஆட்சிக்காலத்தில் இந்தத் தந்திரோபாயங்கள் சந்தேகத்தையும் வெறுப்புணர்ச்சியையும் பகைமையையும் வளர்த்து இனக்கலவரங்களைக்கிளறிவிட்டன.

### சரித்திரம் கூறுவது

ஒரே நாட்டில் வாழும் பல்வேறு மக்களிடையே சந்தேகம், ஒற்றுமையின்மை, குழப்பங்கள், மோதல்கள் இருந்தால் அந்நாடு பலதுறைகளிலும் சீர்குலைந்து சிதைந்தொழிந்துபோய்விடும். இதற்குப்புறநடை எதுவுமே இல்லை என்பது காந்தோன்றிய காலமுதல் வாழ்ந்த நாடு ஒவ்வொன்றினதும் சரித்திரமும் கூறும். பொருளாதாரத்துறை அழிந்துபடும். கலாச்சாரத்துறையில் பொதுவாழ்வும் நன்நெறியும் இழிநிலை அடையும். இலங்கைத்திருநாட்டின் சரித்திரமும் கடந்த சில வருடங்களாக இதே மாதிரித்தானயிற்று. பொருளாதாரத்துறையில் நாம் அழிவின் விளிம்புக்கு வந்திருந்தோம்; கலாச்சாரத்துறையில் சோம்பலும் தேக்கநிலையும் ஏற்பட்டது. [illegible] பொரு[illegible] குழப்பத்தையும் பல்கலைக்கழகங்களின் வீழ்ச்சியையும் திரும்பிப்பாருங்கள். பொதுவாழ்வில் எமது நாடும் மக்களும் இவ்வளவு கடைநிலைக்குள் ஒருபோதும் வீழ்ந்ததில்லை.

தமது கயமைத்தனமான நோக்கங்களுக்காக மதத்தைக் காட்டிக் கபடக் கூக்குரல் எழுப்பி அப்பாவி மக்களை ஏமாற்றி மோசடி செய்வதில் எமது நாட்டுக்கும் நாட்டின் எதிர்காலத்துக்கும் துரோகிகளாயிருக்கும் இவர்கள் இம்மியும் வெட்கமடைகிறார்களில்லையே என்பதை நினைக்க மனம் பெரிதும் வேதனையடைகிறது.

முதலாவதாகத் தமக்கோ பிறர்க்கோ அநியாயம் இழைக்கப்படும் போது அதை ஒருபோதும் பார்த்தும் பார்த்துக் கொண்டு நிற்காதிருக்கக் கூடிய கட்டுப்பாடும் ஒற்றுமையுங் கொண்ட மக்களை நாம் உருவாக்க வேண்டும். ஊருக்குபதேசம் செய்யுமுன்னர் எமது வீட்டை நாம் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். எமது சொந்த சகோதரர்களுக்குள் ஒரு பகுதியினருக்கு எமது மூதாதையோரும் நாமும் சாதியின் பேரில் இழைத்துவந்த நீதியீனத்தையும் அவமானத்தையும் கைவிட்டு விடுவதுடன் தீண்டாமை என்ற சாபக்கேட்டையும் அவசரத்தில் நாம் அகற்றிவிட வேண்டும். தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உரிமை குறைந்த ஒரு பிரிவினர் இருக்க விட்டு வைப்பது எமக்கு ஒரு பலவீனமும் எமது கலாச்சாரத்துக்கு ஓர் ஆபத்தாகும். தனது கலாச்சார ஆத்மீக யாழ்விலுள்ள இந்தக் கறையை அகற்றி எமது இனம் தன்னைத் தானே தூய்மைப் படுத்திக் கொள்ள எமது தலைமைப் பதவிகாலத்தில் நான் நெஞ்சார்ந்த முயற்சி எடுப்பேன்.

தமிழ் பேசும் மக்களின் சாதி, மதம், இனம் வாழ்விடம் எதுவாயிருந்தாலும் இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்று எப்போதுமே வற்புறுத்தி நின்ற கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சிதான் என்று நாம் பெருமையுடன் கூற முடியும். இந்த ஒற்றுமையினால் ஏற்பட்ட பலத்தைக் கொண்டு எம்மோடு பொதுத் தாயகத்தில் வாழும் சிங்களச் சகோதரர்களுடன் நிறைவான ஒற்றுமையையும் கருத்திணக்கத்தையும் ஏற்படுத்த வேண்டும் என்பதே எமது குறிக்கோளும் பிரார்த்தனையுமாகும்.

## அடம்பன் கொடியும்..

எம்மிடையே சாதிமத பிரதேச அடிப்படையில் பிளவுகளை ஏற்படுத்தி அவ்வழியில் பிரதேசத் தலைவர்களாகவோ உள்ளூர்த் தலைவர்களாகவோ அல்லது ஒருபிரிவின் தலைவர்களாகவோ அரசியற் பிரபல்யத்தைப் பெற்றுவிடலாம் என்று நம்பி உழைக்கும் சில தவறான வழிசெல்லும் தன்னலம் பேணிகள் எமது மத்தியில் இருக்கிறார்களென்பது வேதனைக்குரிய விடயம். அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு! தமிழ் பேசும் மக்களிடையே சாதி மதம் பிரதேசம் என்ற அடிப்படையில் பிளவுகளுக்குத் தூபமிட்டு, நமக்குள் நம்மை மோதவிடுவதன் மூலம் எம்மனைவரையும் அழித்துவிட வேண்டும் என திட்டமிட்டுச் செயலாற்றி வரும் ஒரே சிங்கள வகுப்புத்துவேஷத் தலைவர்களின் தீவிர முயற்சிகளை முறியடித்து தமிழ் பேசும் மக்களும் மனிதர்களாய் இங்கு வாழ்வதனால் ஒன்றுதிரண்டு ஒரு கொடியின்கீழ் பலம் பெற்று நிற்கும் தமிழினம்தான் அதைச் சாதிக்க முடியும்.

### பெண்களின் பங்கு

ஒரு நாட்டின் தாய்மார்களே பெண்கள். நாட்டினத்தைப் பெற்றெடுத்து உணவூட்டுபவர்கள் பெண்கள். தாம் பெற்றெடுத்தவர்களுக்கு எப்போ ஆபத்து ஏற்படுகிறது, எப்போ உதவியும் பாதுகாப்பும் தேவை என்பவற்றை உள்ளுணர்வில் அறியக் கூடியவர்கள் பெண்கள். முன்னைய அரசாங்கங்கள் எம்மைத் துன்புறுத்திய இருள் சூழ்ந்த காலத்தில் மற்றெவர்களிலும் பார்க்க எம்மோடு மேடுபள்ளமனைத்திலும் அணிதிரண்டு நின்றவர்கள் தமிழ்ப் பெண்களே. தமது குழந்தைகளுக்கோ நாட்டினத்துக்கோ கடமை புரியவேண்டிய சந்தர்ப்பங்களில் தவறான அடியெடுத்து வைக்கவோ கைலஞ்சம் ஏற்கவோ பதவி, சிநேகம் ஆகியவற்றால் விலைக்கு வாங்கப்படவோ முடியாதவர்களே பெண்கள் என்பது எமது அனுபவம்.

எமது தாய்க்குலம் இதுவரை ஆற்றிய பெரும் பணிக்குப் பத்தாவது தேசிய மகாநாடு கூடுமிந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு எனது தாழ்மையான அஞ்சலியைத் தெரிவித்துவைக்க விரும்புகிறேன்.

### மொழிப் பிரச்னை

மொழிப் பிரச்னைமீது சில வார்த்தைகள் கூறவது அவசியம். முன்பு கூறியதுபோல இன்று எம்முன் பொருளாதாரத்துறையில் அவசரநிலை ஏற்பட்டிருக்கிறது. மிகத் திறம்படத் திட்டமிட்ட துரிதமான அபிவிருத்தி முயற்சிகளெல்லாம் தாமதப்பட்டுத் தோல்வியடைவதற்கு முக்கிய காரணம் வருத்தப்படவேண்டிய அளவுக்குத் திறமையும் துரிதமுங் கொண்ட நிர்வாகம் இல்லாதிருப்பதேயாகும். திறமையும் துரிதமும் கொண்ட நிர்வாகத்திலும்பார்க்க மொழி முக்கியமானது என்று நினைக்கும் வெறியர்கள் இருதரப்பிலும் இருக்கிறார்கள். ஒரு பிரதேசத்தில் வதியும் மக்களின் மொழியில் நிர்வாகம் நடந்தாற்றான் பொது நிர்வாகம் துரிதமாகவும் திறமையாகவும் இருக்கும். எனவே விசேடமாக வேலைக்குத் தெர்வு செய்யப்பட்டு அவ்வேலையில் பாதுகாக்கப்பட்டுப் பொதுமக்களிடமிருந்து ஊதியம்பெறும் அரசாங்க ஊழியர்கள் நாட்டு மக்களனைவருக்கும் திறம்படவும் துரிதமாகவும் பணிபுரியச் சாதனம் பெற்றிருக்கவேண்டும். அவ்வப் பிரதேசத்து மக்களின் மொழியில் நிர்வாகம் நடைபெற்றாற்றான் அத்தகைய பணி சாத்தியமாகும். இலங்கையில் அரசாங்க ஊழியர்கள் இடமாற்றத்துக்குரியவர்கள். எனவே இவ்வூழியர்கள் தமிழராகவோ சிங்களவர்களாகவோ பறங்கியராகவோ முஸ்லிம்களாகவோ இருந்தாலும் தாம் பணிபுரி

(3-ம் பக்கம் பார்க்க(

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தொழில் நுட்பக்கல்வி பிராந்திய வாரியாக்கப்பட வேண்டும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் பிரதேசத்து மொழியை அறிந்திருக்கவேண்டியது அவசியம்.

மக்களுக்காக மக்களால் நடைபெறும் மக்களாட்சி தான் சனநாயகமானல் அத்தகைய ஒரு ஆட்சி மக்களின் மொழியில் மாத்திரம்தான் நடக்கமுடியும். சனநாயகத்தில் மக்கள்தான் ஆளுபவர்கள். அரசாங்க ஊழியர்கள் எந்த உச்சப்படியிலிருந்தாலும் அவர்கள் மக்களின் பணியாளர்களேயாவர். சனநாயகத்தில் அமைச்சர்களும் மக்கள் விருப்பத்திற்கமைய பணி புரியும் ஊழியர்களேயன்றி எசமானரல்லர். எனவே ஒரு அரசாங்க ஊழியன் தனது எசமானர்களான மக்களுக்கு ஊழியம் புரிவதானல் அவ் ஊழியம் அந்த மக்களின் மொழியிற்றான் இருக்கமுடியும்.

அரசாங்க ஊழியரனைவரும் தமிழும் சிங்களமும் தெரிந்திருக்கவேண்டுமென்று ஐக்கியதேசியக் கட்சி தனது தேர்தல்விஞ்ஞாபனத்தில் தெளிவாகக் கூறியிருக்கிறது அரசாங்க ஊழியர்கள் அனைவரும் இரு மொழிகளையும் தெரிந்திருக்காதவரை நிர்வாகம் திறமையாகவும் துரிதமாகவும் பயன்பயப்பதாயும் இருக்கமாட்டாது. இந்த அளவிற்கு தேசிய அபிவிருத்திக்கும் முன்னேற்றத் திற்குமான எங்கள் அவசர இயக்கம் தாமதமாகும்; வியர்த்தமடையும்.

## தமிழ்மொழிச்சட்டம்

எனவேதான் ஜனவரி 8-ம் திகதி (1966) நாட்டு மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு சட்டமாகிய தமிழ் மொழி விசேட வசதிகட் சட்டம் பெரிதும் தேவைப்பட்ட ஒரு சட்டமாயிருந்தது. சிங்களம் மாத்திரமென்ற சட்டத்தின் காலடியில் நசுக்கப்பட்ட தமிழ்பேசும்மக்களின் தன்மானத்தைப் பெருமளவில் இச்சட்டம் மீட்டுக்கொடுத்திருந்தது என்பது உண்மையே. ஆயினும் இது அரசாங்கப் பொதுவிவகார நிர்வாகத்தைத் துரிதப்படுத்தவும் திறமையாக்கவும் முடியும் என்ற வகையில் தமிழ் பேசும் மக்களது நலவுரிமைகளை மாத்திரம் பேணும் ஒன்றல்ல; நாட்டுமக்களனைவரதும் நலனுக்குமே உகந்த ஒன்ருகும்.

## ஜனநாயக அரசாங்கம்

இன்று இலங்கையில் நாம் ஜனநாயக அரசாங்கத்தைப் பெற்றுள்ளோம். மக்களுக்கு அரசாங்கத்திற் பங்கிருக்கிறது. எனவே நிர்வாகம் அனைத்தும் தலைமைக்காரருக்கு ஊடாக இல்லாது மக்களுடன் நேரடியாகவே நிகழுகிறது. எனவே நிர்வாகம் துரிதமாயும் திறமையாயும் பயன்விளைவிப்பதாயும்இருப்பதாயின் அது அவ்வப்பகுதி மக்களது மொழியிற்றான் நடக்கவேண்டும்.

## அரசமொழிக்காக மனிதரல்ல

நான் மீண்டும் கூறிவைக்க விரும்புகிறேன்; மனிதரின் தேவைகளுக்காக ஆட்சிமொழி உண்டாக்கப்படுவதேயன்றி ஆட்சிமொழியின் தேவைகளுக்காக மனிதர் உண்டாக்கப்படுவதில்லை. நிர்வாகத்தின் துரிதமும் திறமையும் இருப்பதாயின் அது அவ்வப் பிரதேச மொழிகளிற்றான் நடக்கவேண்டும்.

இந்த தமிழ்மொழி விசேட வசதிகட்சட்டம் எமது தேசிய அபிவிருத்தியையும் முன்னேற்றத்தையும் ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் வார்த்தெடுத்த ஓர் அதிசய கருவியாகும். ஆனல் நிச்சயமாக தேசிய நலனுக்கு விரோதமாக இயங்கும் எதிர்க்கட்சி நாசவேலைகாரருக்குப்பயந்து இதை நடைமுறைக்குக் கொண்டுவருவது காத்திரமாகவோபயன் பயக்கக்கூடியதாகவோ மேற்கொள்ளப் படவில்லை என்பதை உணரும் போது துக்கமாக இருக்கிறது.

## கல்வி பற்றி . . .

இறுதியாகத் தமிழ்பேசும் மக்களுக்கு ஓர் செய்தி. ஆரம்ப உயர்தர பாடசாலைகளிலும் அடிப்படை உயர்தர தொழில்நுட்பக்கல்லூரிகளிலுள்ள பல்கலைக்கழகத்திலும் எமது குழந்தைகளின் கல்விபற்றி இன்னும் இறுதியாக முடிவெடுக்கப்படவில்லை. இவ்விடயமாகஎமது கல்விமான்களும் சிந்தனையாளர்களும் ஆழ்ந்து அலசிப் படித்துத்திட்டம் வகுக்கவேண்டும். இலங்கையிலுள்ள குழந்தைகளனைவரினதும் தொழில் நுட்பக் கல்வி பற்றியும் இன்னும் முடிவாக்கப்படவில்லை. மாணவர்களும்அவர்களுக்கு வளர்ச்சியூட்டிய பிரதேசம் பயனடையக் கூடியதாகவும் கல்விப்பகுதிகளை அபிவிருத்திசெய்ய இம்மாணவர்களை எதிர்பார்த்து நிற்கும்நாடு வளர்ச்சி பெறுவதற்காகவும் தொழில்நுட்பக் கல்வி பிராந்தியவாரியாக்கப்படவேண்டும்.

## எதிர்ப்போம்

கல்வி மசோதா என்ற திரைக்குப்பின்னிருந்துஎந்த வகையினதுமான குள்ளத்தனச் சூழ்ச்சிகளினுல் தமக்கு தனிச்சலுகையோ அதிகாரமோ தேட முயலும் அற்ப மனிதரின் முயற்சிகளையும் நாம் தீவிரமாக எதிர்த்தே தீருவோம்.

## பல்கலைக்கழகம்

இந்தக் கட்டத்தில் பொருத்தமான ஒரு விடயத்தை இங்கே குறிப்பிடவேண்டும். தொழில்நுட்ப, விஞ்ஞான உட்திறனும் பாரியகலாச்சார சரித்திரமும்கொண்ட தமிழ் பேசும் மக்களுக்கு தமக்கென்ற ஒரு பல்கலைக்கழகம் இருக்கவேண்டும். ஏனைய பெரிய பல்கலைக்கழகங்கள் போல ஏனைய பாகங்களிலிருந்தும் உலக நாடுகளிலிருந்தும் மாணவர்கள் இங்குவந்து கல்வி பயில்வது வரவேற்கப்படும். கலாச்சாரத்திற்கும் நவீன விஞ்ஞானத்திற்கும் இடமளிக்காத ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகம் இலங்கையிலிருக்கமுடியாது என்பது எமது ஆழ்ந்த கருத்து. அத்துடன் இந்துமத மெய்விளக்கத்துறைக்கும் நெறிமுறைக்கும் கலாச்சாரத்திற்கும் ஒரு பிரிவும் இஸ்லாமிய கலாச்சாரத்துக்கும் போதனைக்கும் இன்னொரு பிரிவும் அமைக்கப்படாத ஒரு தமிழ்ப்பல்கலைக்கழகம் இலங்கையிலிருக்க முடியாது என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும். கிறிஸ்தவ மத பாண்டித்தியத்துக்கு கத்தோலிக்க, புரட்டத்தாந்த மதக்கல்வி நிறுவனங்கள் ஏற்கனவே போதியளவு இருப்பதினுல் கிறிஸ்தவ மதத்துறைக்கு ஒரு தனிப் பிரிவு தேவையாயிருக்காது. இறுதியாக தமிழ்பேசும்மக்களுக்கும் இலங்கை நாட்டிற்கும் பெருநிதியமாய் விளங்கக்கூடிய நடைமுறை வண்ணமும் பண்பாடும் நாட்டுப்பற்றும் தூரநோக்குங்கொண்ட இளைஞர்களை உருவாக்கமுடியாத ஒரு தமிழ்ப்பல்கலைக்கழகமும் இலங்கையில் இருக்கமுடியாது.

## எமது தேசிய பிரச்சினைகள் மூன்று

● உணவு உடை ஆகியவற்றிற்கு வருடா வருடம் பெருந்தொகைப் பணம் செலவாவதினுல் அந்நியச் செலாவணியிலேற்படும் பற்ருக்குறை எமது கைத்தொழில் விஸ்தரிப்பிற்கும்தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்கும் பணம் சேமிப்பதனுல் இந்தப் பண விரயத்தை நாம் நிறுத்தவேண்டும்.

● அதிகரித்துவரும் வேலையின்மையும் மக்கட்பெருக்கமும். இவ்விரண்டினதும் விளைவாக நாம் இயந்திர சாதனங்களை ஒரு முனைப்பாகப் பாவிக்கும் ஏற்பாடுகளிலும் பார்க்க தொழிலாளர்களை ஒரு முனைப்பாகப் பாவிக்கும் ஏற்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதே அவசியமாகிறது.

● தகுந்த வகையிற் திட்டமிடப்பட்டு ஒன்றிணைக்கப்பட்ட விவசாய மீன்பிடித் திட்டங்களுக்கும் அவற்ருேடு உடன் செல்லும் சிறியகைத்தொழில் திட்டங்களுக்கும் கிராமத் திட்டங்களுக்கும் அந்நியத் தொழில் நுட்ப உதவியோ பெருந்தொகை அந்நியச் செலாவணியோ தேவையில்லை. இத்துறையில் எமது அனுபவமும் திறமையுங்கொண்ட ஆலோசகர்களைக்கொண்டு நாம் விரிவான திட்டமொன்றை உருவாக்கி வருகிருேம். அதை நாம் விரைவில் அரசாங்கத்திடம் சமர்ப்பிப்போம். மூன்று நாலு வருடத்தில் நாட்டுக்குத்தேவையான உப உணவுப்பொருட்களில் பெரும் பகுதியையும் பருத்தி, பருத்தி நூல், புடவையையும், கரும்புத்தடி சிறிய தொழிலாலைகளிலிருந்து நாட்டைத் தன்நிறைவாக்கக்கூடிய தொகையில் சீனியையும் ஏற்றுமதிக்குப் போதிய அளவு கொடிமுந்திரியையும், வேர்க்கடலையையும் உற்பத்திசெய்யமுடியும் என்று நம்புகிருேம். அத்துடன் உள்ளூர்த்தேவைக்கும் ஏற்றுமதிக்குமென கடலிலும் நீர்நிலைய மீன் வளர்ப்புத் திட்டங்களிலும் இருந்து போதிய மீன், ஏற்றுமதிக்கு உப்பும் பற்ருக்குறையைப் பெருமளவிற் சமாளிக்கமேலதிக நெல்லும் உற்பத்திசெய்யமுடியும். அதே நேரத்தில்அபிவிருத்தி குறைந்த எமது பகுதிகளில் விவசாய மீன்பிடி அபிவிருத்திக்காகப் பாதை போடுதல் நீர்வள ஆராய்ச்சிகள் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆகிறவற்றை உள்ளடக்கிய அவசர வேகத் திட்டமொன்றை மேற்கொள்ள நாம் காத்திருக்கிருேம். இவற்றையடுத்துத் திட்டமிட்ட இளைஞர் குடியேற்ற ஏற்பாடுகளையும் நடைமுறையாக்கவேண்டும்.

---

## மந்திரியை பேட்டிகாண முடிவு

பருத்தித்துறை, வியா.

பருத்தித்துறைமெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை பெற்றுர் ஆசிரிய சங்கக்கூட்டம் சங்கத் தலைவர் திரு கே. ஜெயக்கொடி தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கல்லூரித் தலைவி செல்வி சின்னையாவின் ஓய்வு உத்தரவை ரத்துச்செய்யுமாறுகோரி கல்வி மந்திரியைப் பேட்டிகாண்பதென முடிவு செய்யப்பட்டது.

---

## பொருட்காட்சி

நீர்கொழும்பு, புதன்

கல்விப் பகுதியின் ஆதரவில் நீர்கொழும்பு மேரிஸ் பெண்கள் கல்லூரியில் கலாச்சாரப் பொருட்காட்சி ஒன்று நடைபெறவிருக்கிறது.

# ஸ்தலஸ்தாபன தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்வர்?

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகள் பலவற்றில் கடமையாற்றும் ஸ்தலஸ்தாபன தொழிலாடர்கள் அடுத்த மாதம் 25-ம் திகதி வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சங்கம் எழுதும் கடிதங்களுக்கு தக்க நடவடிக்கை எதுவும் எடுக்கத் தவறிவருவதாலேயே இவ்வேலை நிறுத்தத்தைச் மேற்கொள்ள இருப்பதாக சங்கம் தெரிவித்துள்ளது. பருத்தித்துறை, சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, ஊர்காவற்றுறை, நெல்லியடி, காங்கேசன்துறை, சுன்னுகம், கோப்பாய், கட்டவேலி கரவெட்டி, தொண்டைமனுறு, அச்சுவேலி, புலோலி ஆகிய இடங்களில் கிராம, பட்டின சபைகளில் கடமையாற்றும் தொழிலாளர் வேலைநிறுத்தத்தில் கலந்து கொள்வர்.

---

## தையற் தொழிலாளர் சங்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்தில் தையற் தொழிலாளர் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்ய திரு. வி. ஏ. கந்தசாமி, திரு. இளங்கிரன் ஆகியோர், தொழிலாளர்களுக்கு தொழிற்சங்கம் இருக்க வேண்டிய அவசியத்தையும் தையற் தொழிலாளர்களின் பல்வேறு பிரச்சினைகளையும் பற்றியும் பேசினர்கள்.

எஸ். ஏ. அமிர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கீழ்காணுவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: எம். சாகுல் கமீது, உப-தலைவர்: சி. எம். அசிஸ், காரியதரிசி: எஸ். ஏ. அமிர், உப-காரியதரிசி: எம். றபீடீன், தனதிகாரி: எம். ரி. ஜகரின் நிர்வாக சபை உறுப்பினர்கள்: எஸ். சகல்பதீன், எம். அப்துல் றகீம், எம். எஸ். பாருக், ஏ. கரீம்.

## பூங்காவன உற்சவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

பன்னலை சிவபூதவராயர் ஆலயத்தில் பூங்காவன உற்சவம் இன்று நடைபெறும். பகல் விசேஷ பூசையும், அபிஷேகமும், அன்னதானமும் இடம்பெறும்.

---

## சுகர்னே மீது கண்டனம்

ஜாகர்த்தா, ஜூன் 24

ஜனதிபதி சுகர்னே மக்கள் ஆலோசனை காங்கிரசில் நிகழ்த்திய பிரசரகத்தை பல அங்கத்தினர்கள் கண்டித்துள்ளனர்.

---

## கைத்தொழில் ஆசிரியர் கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வடபகுதி கல்விப் பகுதிக் கைத்தொழில் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் இன்று 24-6-66ம் திகதி காலை 10மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.


REGAL—JAFFNA
NOW SHOWING
Russ Tamblyn-Marria Granada
in
SON OF A GUNFIGHTER
Cinemascope-Metrocolor

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி - சாவித்திரி
நடித்த
நவராத்திரி

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சிகள்
சிவாஜி - ஜமுனு
நடித்த
பொம்மைக்கல்யாணம்

29 புதன் முதல்
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்)
ஜெயலலிதா — ஸ்ரீகாந்த்
ஆஷா, நிர்மலா
மற்றும் பலர் நடிக்கும்
“வெண்ணிற ஆடை”

கடைசி வாரம்
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (அம்பாறை)
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
நடிக்கும்
தெய்வத்தாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழரின் பிரதேசம் பாதுகாக்கப்பட வேண்டும்'

## வரவேற்புக்குழுத் தலைவர் அறைகூவல்

கல்முனே, சனி

''இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 10-வது தேசிய மகாநாடு நடைபெறுவதற்காக, மீன்பாடும் தேனுடாகிய மட்டக்களப்பில், முஸ்லிம் பெருங்குடி மக்கள் பெரும்பான்மையாய் வதியும் அம்பாறை மாவட்டத்தின் தலைநகருக்கு முற்றிலும் பொருத்தமும் தகுதியும் உடையதாகிய கல்முனையினைத் தெரிந்தெடுத்தமைக்காகவும், இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் ஒரு அங்கமாகிய இஸ்லாமியப் பெருங்குடி மக்களை கௌரவிக்கும் முகமாகவும் கட்சியின் இலட்சியத்திற்குக் கட்டுப்பட்டு, தளராத கொள்கைப்பற்றும், தயங்காத செயல் நோக்கும் கொண்ட ஒரு முஸ்லிம் மகனை உரிய முறையில் சிறப்புப்படுத்துவதற்காகவும், இப்பத்தாவது தேசிய மகாநாட்டின் வரவேற்புக் குழுவின் தலைவராக என்னைத் தெரிவு செய்ததற்காகவும், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் 10-வது தேசிய மகாநாட்டு வரவேற்புக் குழுவினருக்கும் எனது மனமார்ந்த நன்றியை ஆரம்பத்திலேயே கூறிவைக்க விரும்புகிறேன்''

பாத்திமா கல்லூரி மைதானத்தில் அமைக்கப்பட்டிருக்கும் வன்னியசிங்கம் அரங்கில் தமிழரசுக்கட்சியின் பத்தாவது தேசிய மகாநாடு கோலாகலமாக ஆரம்பமாகியது. தேசிய கீதம் ஒலித்துக்கொண்டிருக்க, தமிழரசுக்கட்சியின் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கட்சியின் மூவர்ணக்கொடியை ஏற்றி வைத்தார். இதனைத் தொடர்ந்து மகாநாட்டில் வரவேற்புக்குழுத் தலைவர் ஜனுப் செ. செ. மசூர் மௌலானு வரவேற்புரை நிகழ்த்துகையில்தான் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

### புண்ணிய பூமி

இந்த மகாநாடு நடைபெறும் இந்தப் புண்ணிய பூமி, இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களினது, சிறப்பாக முஸ்லிம் பெருங்குடி மக்களினது கூர்மையான உற்று நோக்குக்குருத்தாகிய ஒரு பிரதேசமாகும். 1956-ம் ஆண்டில் அதன் பாராளுமன்ற உறுப்பினராக தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஒரு முஸ்லிமையும் 1960-ம் ஆண்டு தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த இன்னுமோர் முஸ்லிமையும் தெரிந்தெடுத்து பெருமை பெற்றது மட்டுமல்லாமல், தமிழரசுக்கட்சியின் அபேட்சகர் தோல்வி கண்டபொழுதுகூட மிகவும் குறைந்த தொகையாலேதான் தோல்வியடையக் கூடியதாகவும் சிறப்புறச் செயலாற்றி மதிப்புப்பெற்றுள்ளது இந்தக் கல்முனைத் தொகுதி மேலே குறிப்பிட்ட காலங்களில் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏதோ காரணம்காட்டி கட்சியைவிட்டு விலகிவிட்டாலும் இத்தொகுதி வாழ் தமிழ் பேசும் பெருங்குடி மக்களிடம் உள்ள கட்சிப் பற்றும், தமிழரசுக் கட்சியின் இலட்சியங்களில் அவர்கள் கொண்டுள்ள தளராத நம்பிக்கையும், எவ்விதத்திலும் குறைவடையவில்லை என்பதை நான் கூறாமலே, நீங்கள் யாவரும் அறிந்திருப்பீர்கள். கல்முனைத் தொகுதியினதும், அதனோடு சேர்ந்த நிந்தவூர், பொத்துவில், அம்பாறை ஆகிய தொகுதிகளில் வதியும் தமிழ் பேசும் பெருங்குடி மக்களினதும் பற்பல தேவைகளையும், கண்ணுங்கருத்தோடு அவதானித்து, அவைகளைச் செய்து வைப்பதற்கு இலங்கைத் தமிழரசுக்கட்சி எவ்வளவோ முயற்சிகளை மேற்கொண்டபோதும், அப்பகுதியின் அன்றையப் பிரதிநிதிகளிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டளவு ஒத்துழைப்புஇல்லாத காரணத்தால் உரிய முறையில் தேவைகளைக்கவனிக்கமுடியவில்லை என்ற மனவேதனை எம்மைவிட்டு இன்னும் அகலவில்லை.

### முன்னைய அரசாங்கத்தின் இரக்கமற்ற செயல்

இப்பகுதியில் வாழும் பல்லாயிரக்கணக்கான மக்கள் சிறப்பாக முஸ்லிம் மக்கள், பரம்பரை பரம்பரையாக, ஆட்சி செய்து வந்த அம்பாறைப் பிரதேசத்திலுள்ள பண்படுத்தப்பட்ட பூமிகள் எல்லாவற்றையும், முன்னைய அரசாங்கங்கள் இரக்கமற்ற தன்மையில் பறிமுதல் செய்து, சிங்கள மக்கள் கையில் ஒப்படைத்தபோது அதை எதிர்த்து, பாராளுமன்றத்தின் உள்ளிலும் வெளியிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சேபனைக் குரலெழுப்பிய போதெல்லாம் ''உங்களுக்கென்ன இவ்வளவு அக்கறை, அப்பகுதிப் பிரதிநிதிகள் இந்த விடயத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லையே'' என்று கூறக்கூடியதாக, அரசாங்கத்திற்கு உடனடிப் பதில் தயாரித்துக்கொடுப்பதைப் போன்று நமது முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர்கள்செயல் புரிந்துள்ளமை எம் எல்லோரையும் வாட்டாமல் வாட்டுகிறது. முஸ்லிம் மக்கள்தம்முடைய தொகை கூடியதாக, அவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு மாவட்டத்தில் ஆக்கப்பட்ட ஒரே ஒரு கச்சேரியை தமிழ் பேசும் மக்களுக்கு எவ்விதத்திலும் பொருத்தமற்ற இடத்தில் நிறுவப்பட எத்தனங்கள் செய்யப்பட்டபோது அதனை எதிர்த்து, பாராளுமன்றத்தின் உள்ளிலும் வெளியிலும்இலங்கைத் தமிழரசுக்கட்சி குரலெழுப்பியபோது, கேவலம் இப்பிரதேசத்தைச் சேர்ந்த முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஊமைகளாகவும், அலட்சியமனப் போக்குடையவர்களாகவும் இருந்துவிட்டபடியினுல் இன்று அம்பாறை மாவட்டத்து தமிழ் பேசும் மக்கள் படும் துயரம் எண்ணும் தரமன்று. எனினும் இலங்கைத் தமிழரசுக்கட்சிகொண்டுள்ள நல்ல எண்ணங்களைச் செயல் படுத்தும் போது இக்குறைகள் நிவர்த்தி செய்யப் படுவதற்காக சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளத் தயங்காது என்று நான் கூறிவைக்க விரும்புகிறேன்.

### ஜனநாயகம் காப்பாற்றப்பட்டது

1949-ம் ஆண்டில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டபோது நாமிருந்த பெரிய நெருக்கடியான நிலை காலாகாலம் இன்னும் நெருக்கமாகவும் இக்கட்டாகவும் ஆகியதன் காரணமாக எமது கட்சியின் மேல் சுமத்தப்பட்டுள்ள மாபெரிய கைங்கரியத்தின் பெறுப்பும் அதிகரித்துக்கொண்டே வந்தது. ஆனல் 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 22-ந் திகதி நடந்து முடிந்த தேர்தல் தமிழ் பேசும் மக்களுக்கு ஓரளவு மூச்சு விடக்கூடிய வாய்ப்பொன்றை பெறக்கூடியதாக ஒரு பெரிய சந்தர்ப்பத்தை நல்கியது. அதனை நல்ல முறையில் பயன்படுத்திய எமது கட்சி தேசிய அரசாங்கத்தை அமைக்க உதவியதன் காரணமாக ஒரு பக்கம் ஆபத்தில் சிக்கிச் சிதைந்து சின்னுபின்னப்பட்டுக் கொண்டிருந்த ஜனநாயகம் காப்பாற்றப்பட்டதோடு, இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு ஓரளவு சுபீட்சம் பெறக்கூடியதாகவும் அமைந்தது. ஒன்றன்பின் ஒன்ருக ஆட்சிக்கு முன்னைய அரசாங்கங்கள் பல எமக்குப் பல வாக்குறுதிகளையும், நம்பிக்கைகளையும் காலத்திற்குக் காலம் கொடுத்தபோதும், அவைகளை நிறைவேற்றத் தவறிய தன் விளைவாக கலங்கித் தவித்த தமிழ் பேசும் மக்களுக்கு தேசிய அரசாங்கம் ஓரளவு சுபீட்சத்தைக் கொடுக்கும் முகமாக பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

### தமிழ் மொழிக்கு ஒரு இடம்

அவைகளுள் மிக முக்கியமானது தான் அண்மையில் பாராளுமன்றத்திலும், மேல்சபையிலும் பெரும்பான்மையான அதிகப்படியான வாக்குகளால் நிறைவேற்றப்பட்டு இன்று அமுலிலிருக்கும்தமிழ்மொழி விசேஷ ஷரத்துக்கள் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டுள்ள சில விதிகளாகும். இவ்விதிகள் நிறைவேற்றப்பட்ட பிறகு நாம் பல்லாண்டு காலமாக எமது சொந்தமெனக் கொண்டு வாழ்ந்து வந்த பிரதேசங்களாகிய கிழக்கு வடக்கு மாகாணங்களில் எங்களை நாமே, எமது மொழியிலே ஆட்சி செய்யக்கூடிய பெரும் வாய்ப்பினைப் பெற்றுள்ளதோடு, மற்றும் ஏழு மாகாணங்களிலும் எமது மொழியாகிய தமிழ்மொழி மூலமே அரசாங்கத்தோடு தொடர்பு வைத்துக்கொள்வதற்கும், அரசாங்கத்தின் நடவடிக்கைகள் சகலவற்றையும் தமிழ் பேசும் மக்களாகிய நாம் எதுவித கஷ்டமுமின்றி அறிந்து பிரயோசனப்படுத்துவதற்கு வாய்ப்பும் கிடைத்துள்ளது. சிங்களம் பேசும் மக்களோடு தமிழ் பேசும் மக்களும் ஓரளவு சரிநிகர் சமானமாக தலை நிமிர்ந்து நிற்கக்கூடிய அந்தப் பெரிய வாய்ப்பினை தமிழ்பேசும் மக்களுக்கு ஆக்கிக் கொடுத்த இலங்கைத் தமிழரசுக்கட்சித் தலைவர்களே! உறுப்பினர்களே! உங்கள் அனைவரையும் புண்ணியம் செய்த இந்தக் கல்முனைத் தொகுதியும், அம்பாறை மாவட்டமும், மட்டக்களப்புப் பிரதேசமும் வருக வருகவென உளங்கனிந்து வரவேற்கிறது. உங்கள் வருகை நல்வரவாகட்டும். இது காலமெல்லாம் ஆவேசத்தோடும், அடக்க முடியாத துயரத்தோடும், பொங்கி எழும் உணர்ச்சியோடும் நடைபெற்ற மகாநாடுகளெல்லாம் எமது நினைவை விட்டு இன்னும் மறையவில்லை.

### நாடாள்பவரில் நாம் ஒரு அங்கம்

இன்றைக்குச் சூழ்நிலை மாறி, நாட்டை ஆள்பவர்களில் நாமும் ஓர் அங்கமெனவும், தமிழ் பேசும் மக்களுக்கு ஓரளவு விடுதலையும் சுபீட்சமும் பெற்றுக்கொடுத்த கட்சி என்ற அடிப்படையிலும் எமது கட்சியின் 10-வதுதேசியமகாநாட்டை நடத்துவதற்கு கல்முனைக்கு வாய்ப்பளித்த கட்சித் தலைவர்களே! உறுப்பினர்களே உங்களின் வருகையாலும் அதன் மூலம் இம்மகாநாட்டிற்கு ஏற்படும் சிறப்பாலும் கல்முனை மண்ணுக்கே புனிதத்துவம் பெற்றுத் தந்துவிட்டீர்கள். தமிழ் பேசும் மக்களின் மனதைவிட்டு என்றும் அகலாத இந்த நினைவுச் சின்னத்தை ஆக்கித் தந்த உங்கள் அனைவரையும் அன்புக்கரம் நீட்டி வாருங்கள் வாருங்கள் என்று வரவேற்றுப் பெருமை அடைகிறேன்.

### பெருமை கொள்கிறேன்

இலங்கைத் தமிழரசுக் கட்சி எத்தனையோ தேசிய மகாநாடுகளை நடத்தியுள்ளது. கட்சி நடத்திய அத்தனை தேசிய மகாநாடுகளிலும் பங்குபற்றி, பிரசங்கங்களிலும் பங்கு பற்றி, பிரசங்கங்களும் செய்தவன் என்ற பெருமையோடு ஒரு முக்கிய விடயத்தை இங்கு கூடியிருப்போருக்கு மகிழ்ச்சியோடும் பெருமிதத்தோடும், கூறிவைக்க விரும்புகிறேன். நான் கண்ட நான் பங்குபற்றிய, மகாநாடுகளெல்லாவற்றையும் விட சிறப்பான முறையில் இந்த மகாநாடு அமைவு பெற வேண்டும் என்று மகாநாட்டு வரவேற்புக் குழுவினர் இடமரிது செலவெனது இரவிருள் பகலாக, மெய்வருத்தம் பாராது, கண்துஞ்சாது பசிநோக்காது செய்து முடித்த சகல ஏற்பாடுகளும் மிகவும் சிறப்பான முறையில் அமைவு பெற்றுள்ளதைக்காணும்போதும் உணரும் பேறும் வரவேற்புக்குழுவின் தலைவர் என்ற முறையில் எனக்கேற்படும் மகிழ்ச்சியையும் பெருமையையும் எப்படித்தான் விவரிப்பேன் என்றே தெரியவில்லை. என்னைப் பொறுத்தமட்டில், இப்படிச்சிறப்புற சகல ஏற்பாடுகளையும் செய்து முடிப்பதற்கு, வரவேற்புக்குழுவிற்குஅதன்முக்கிய உத்தியோகத்தர்களாக அமைந்த செயலாளர், திரு சாமிஐயாத்தேவர் பொருளாளர் திரு. பி. வி. கந்தையா நொத்தாரிஸ், துணைப் பொருளாளர் திரு. வலோ டிசில்வா நிர்வாகச் செயலாளர் திரு செல்லையா ஆகியோரிடமிருந்து சிறப்பாகவும் மற்றும் வரவேற்புக் குழு அங்கத்தினர் ஒவ்வொருவரிடமுமிருந்து பொதுவாகவும் கிடைத்த பலன் கருதா உதவியேகாரணம் என்றே கூறலாம். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே எமது கட்சியின் சார்பாக நன்றி கூறுவது எமது கடனாகும்.

மகாநாட்டின் சிறப்புக்காக உதவிதேடிச் சென்றவிடத்திலெல்லாம் மனச்சலிப்பின்றி உதவிகள் பல செய்த எல்லோருக்கும், பாடசாலைக் கட்டடத்தையும், மைதானத்தையும், அருகாமையிலுள்ள வேறு கட்டிடங்களையும் மகாநாடு நடத்துவதற்காக கொடுத்துதவியமைக்கு, அதற்குப் பொறுப்பாளிகளுக்கும் தங்களாலான சகல உதவிகளையும் கொடுத்துதவும் பொலிசாருக்கும், வரவேற்புக்குழுவின்சார்பில் எமது நன்றியைக் கூறிவைக்க விரும்புகிறேன்,

கடைசியாக, ஆனல் சிறப்பாக ஒன்றைக்கூற உங்கள் அனுமதி கோருகிறேன். இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சரித்திரத்திலேயே, எமது நாட்டின் பிரதமமந்திரி, அதன் தேசிய மகாநாட்டில் பங்குகொள்வது இதுவே முதற்றடவையாகும். கிழக்கு வடக்கு மாகாணங்களின் எப்பகுதிக்குமேஇன்றுவரை செல்லாத பிரதம அமைச்சர் கௌரவ டட்லி சேனநாயக்கா அவர்கள் எமது அழைப்பை ஏற்று மகாநாட்டின் கடைசி நாள் பொதுக்கூட்டத்தில் கலந்து உரையாற்றச் சம்மதித்து எம்மைச் சிறப்புப்படுத்தியதற்காக வரவேற்புக் குழுவின் சார்பாக எமது நன்றியைக் கூறுவதோடு, எமது அழைப்பை ஏற்று பேச்சாளர்களாகவும் பார்வையாளர்களாகவும் இம்மகாநாட்டிற் பங்குகொள்ள வந்திருக்கும் சகலருக்கும், மற்றும் மகாநாட்டின் சிறப்புக்காக உதவிபுரிந்த மாதர் முன்னணி தொண்டர்படை ஆகியோருக்கும் நன்றி கூறுவதோடு உங்கள் எல்லோரையும் வாருங்கள் வாருங்கள் என்றுமனமார வரவேற்கிறேன்.

### மகாநாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இ. ஈவிவரி.

இரவு 7மணி கலைநிகழ்ச்சி இடம்: விபுலானந்தா அரங்கு, தலைவர் சி. மூ. இராசமாணிக்கம் (பா உ) நிகழ்ச்சிகள்: நடனம், சங்கீதம், வில்லுப்பாட்டு, நாட்டுக்கூத்து, நாடகம்.

### நாளைய நிகழ்ச்சிகள்

காலை 9 மணி அரசியல் மகாநாடு, இடம்: வன்னியசிங்கம் அரங்கு, தலைவர் டாக்டர் இ, மு. வி. நாகநாதன். நிகழ்ச்சிகள்: பொதுச்செயலாளரின் அறிக்கை, தீர்மானங்கள், உத்தியோகத்தர் தெரிவு.

பிற்பகல் 3 மணி ஊர்வலம். பெரிய நிலாவணைச் சந்தியிலிருந்து புறப்பட்டு கல்முனைக் கடற்கரை மைதானத்தை வந்தடையும். பிற்பகல் 5 மணி பகிரங்கக்கூட்டம், இடம்: இராசவரோதயம் அரங்கு. தலைவர் டாக்டர் இ. மு. வி. நாகநாதன்.

பேச்சாளர்கள்: கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சி அமைச்சரும் பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயகாவும் இன்னும் பல பிரமுகர்களும் பங்கு பற்றுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட்டு ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி. 68-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 25-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழநாடு வார மலர்.

மலேசியா தமிழ் மகாநாடு

ஆராய்ச்சிக் கருத்தரங்கு

# இலங்கையில் கிறிஸ்தவர்கள் தமிழ்ப்பணி

இலங்கையில் கிறிஸ்தவர்களின் முதற்பணி என்னும் ஆய்வுக்கட்டுரையை வித்யானந்தன் (இலங்கைப் பல்கலைக்கழகம்) சமர்ப்பித்தார். அதில் அவர் கூறியிருப்பதாவது;-

கிறித்துவர்களின் முதற்பணிகளில் ஒன்று அச்சு இயந்திரம் நிறுவி, ஆயிரக்கணக்கான நூற்களை அச்சிட்டு நாடெங்கும் பரவச்செய்ததாகும். 1821-இல் அமெரிக்க பாதிரியார்களே தொடக்கதில் இதனைச்செய்தனர். கிறிஸ்துவமதத்தைப் பரப்புவதையே அவர்கள் நோக்கமாகக் கொண்டிருப்பினும் தமிழ்க் கல்வியும், தமிழ் மொழியும் பல்வேறு துறைகளில் முன்னேறின. ஆறுமுக நாவலர் பணிக்கும் அமெரிக்க பாதிரியார்கள் பணியே முன்மாதிரியாகவிருந்தது.

மேலைநாட்டுக்கல்வி இலங்கையில் பரவவும்இவர்களே காரணமாகவிருந்தனர். 1823-ல் தொடங்கப்பட்ட கல்லூரி மேலைநாட்டுக் கல்வியைச்சொல்லித்தரத்தொடங்கிற்று. தமிழில் எழுந்த முதல் ''அறிவியல்'' நூலும் கிறித்துவப் பாதிரியார்களால் மொழிபெயர்ப்பாக வெளியிடப்பட்டதே. 1867-ல் இரண வைத்தியம் என்பது மொழிபெயர்ப்பு நூலாக வெளிவந்தது. ''வைத்தியாகரம்'' 1872-ல் மொழிபெயர்ப்பாகவந்தது. மேலும் பல துறைகளிலும் மொழிபெயர்ப்பு நூற்கள் வெளிவரலாயின. ஆட்சி மொழியாக ஆங்கிலமேயிருந்து வந்தமையின் தமிழ் மொழியில்அறிவியல்கல்வி'' வளர்தற்குப் பெரிதும் வாய்ப்பில்லாமல்போய்விட்டது.

அகராதித் துறையிலும் கிறித்துவப் பாதிரியார்கள் செய்த பணி பெரிது. 1833-ல இப்பணி தொடங்கப்பெற்றது. பண்டிட் சந்திரசேகரர் எழுதி முடித்த அகராதி ஒன்றினை 1842-ல் ஸ்பால்டன் பாதிரியார் வெளியிட்டார். 585000 சொற்களடங்கியது. சிறந்த அகராதி தந்த சுதிரை வேலுப்பிள்ளையும், முதலில் கிறித்துவராகவே இருந்தவரே. ஆங்கிலத்தமிழ் அகராதி வின்சுலோ 1842-ல் வெளியிட்டார். அடுத்தது பத்திரிகை உலகு. 1841-ல் 'இருமொழி இதழாக Morning Star என்பது வெளிவந்தது. யாழ்ப்பாணத்துத் தமிழர் இருவரே இதனைப் பதிப்பித்தனர்.

மொழிபெயர்ப்பு: தமிழ் நூற்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல்.1854-ல் சிவஞானபோதம், சிவப்பிரகாசம் ஆங்கிலத்தில் கிறித்துவப் பாதிரியார் ஒருவரால் மொழிபெயர்க்கப்பட்டன. பத்துப்பாட்டு, மூதுரை, நல்வழி, பழமொழிகள், தாயுமானர்பாடல்(1646-ல் செல்லையா) மொழிபெயர்க்கப்பட்டன.

நூல் வெளியீடு; பண்டைத் தமிழ் இலக்கியங்களை வெளியிடுவது கிறித்துவரால் தொடங்கப்பட்டதே. சி. வை. தாமோதரம்பிள்ளையின் பணியினைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், கலித்தொகை, சூளாமணி, இந்துக்கள், சிலர் இவைகளைப்பின்பற்றி இந்த சமய நூற்களை வெளியிடலாயினர். அறுமுகநாவர் பதிப்பும் இவர் நெறியினைப் பின்பற்றிச் செல்வனவே.

உரைநடையும், இலக்கியமும் இருவும் கிறித்துவர்களின் முதற்பணியே. இவ்வயிலும் ஆறுமுகநாவலர்க்கு வழிகாட்டிகளாக இருந்தவர்கள் கிறித்தவர்கள். இலங்கையில் முதல் தமிழ் புதினத்தை எழுதியவரும் கிறித்துவரே.

மேடைப்பேச்சை இலங்கையில் தொடங்கியவர்களும் அவர்களே. பொது மக்களைக் கவர அவர்கள் மேற்கொண்ட இந்நெறியினைத் தாம்மேற்கொண்டு அவர்களைவிடவும் சிறப்பாக வாழ்ந்தவர் ஆறுமுகநாவலர். தமிழ் இலக்கிய வரலாற்றை முதலில் ஆங்கிலத்தில் எழுதியவரும் கிறித்துவரே. சைமன்கேசி செட்டி என்பார் எழுதிய Tamil Plutarch என்பதே அந்நூல். தமிழில் முதலில் எழுந்த ''பாவலர் சரித்திர தீபகம்'' ஆர்னல்டு என்னும் கிறித்துவர் எழுதியது.

## ருஷ்யாவிலுள்ள கஸாக்ஸ்தான்குடியரசில் ஒரு நடனக்கோஷ்டியினர்



(படத்தின் மத்தியில் கண்ணாடியுடன் காணப்படும் திரு. ஐ. ஆர். அரியரத்தினம் சோவியத் ஆசிய குடியரசுகளைப்பற்றி எழுதும் கட்டுரை அடுத்த 2-7-66 வார மலரில் வெளிவரும்.)

# விரதங்களும் அவற்றை அநுட்டிக்கும் நோக்கமும்

விரதம் என்பது தமிழ் வடிவம் பெற்ற சம்ஸ்கிருதச் சொல். அது வடமொழியில் ''வ்ரதம்'' எனப்படும். அதனைக் குறிக்கும் நேர் தமிழ்ச் சொல் ''நோன்பு'' என்பது. ஒழுங்கான கட்டுப்பாடுகளுக்கு அமைந்து செய்யும் தவமே விரதம், அல்லது நோன்பு எனப்படும். மன உறுதியுடன் நெறிமுறை தாங்கி இறைவனை எண்ணுவது நோன்பு.

ஏறக்குறைய எல்லாச் சமயங்களும் தங்கள் தங்கள் சமய அடிப்படை விதிகளுக்கிசைய நோன்பு முறைகளை வகுத்துள்ளன. இக்காலச் சிறுவர்களுட் பலர், விரதங்கள் எல்லாம் வயது சென்றபின் அனுட்டிக்கப்படவேண்டியன என்றும், அதனுல் அவற்றிற்கும் தமக்கும் தொடர்பு வேண்டியதில்லை என்றும் கருதி, விரத அனுட்டானங்ளைச் செய்யப் பின்வாங்குகிருர்கள். வயது வந்தவர்களும் விரதங்களின் அடிப்படை நோக்கத்தை அறியாமையால் அவற்றைக் கைவிடுகிருர்கள். இங்கே, சைவசமயிகளுக்குப் பொதுவாக உள்ள விரதங்களைப் பற்றியும் அவற்றின் அனுட்டான நோக்கத்தைப்பற்றியும் சிறிது விளக்குவாம்.

இன்னது செய்யவேண்டும், இன்னது செய்யலாகாது என்ற கட்டுப்பாடுகளுக்கு அமைந்து மனிதன் வாழத் தொடங்குவது பள்ளிப்பருவத்திலாகும். இன்பமும் துன்பமும் செறிந்துளதே மனித வாழ்க்கை. இயலுமானவரையில் துன்பத்தை நீக்கி இன்பத்தை மாத்திரம் அனுபவிக்க விரும்புவதே பொதுவான மனித இயல்பு. அது எப்பொழுதும் எல்லோருக்கும் ஒரு சேர அமையாது. இன்பத்தையும் துன்பத்தையும் சமபுத்தி பண்ணி ஏற்று அனுபவிக்கத் துணிந்துகொண்டால் அவையிரண்டும் மனிதனை வசம் இழக்கச் செய்யும்வன்மை உடையனவாகமாட்டா. அத்துணிவு கொள்ளப் பயிற்சியளிப்பனவே விரதங்கள் அல்லது நோன்புகளாம்.

''அன்றறிவாம் என்னு(து)
அறஞ் செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்ருத்
துணை''—திருக்குறள்,

யாம் இப்பொழுது சிறுவர்கள்தாமே. வயது சென்றபின் இறப்பதற்குமுன் அறச்செயல்களை—விரத அனுஷ்டானங்களைச் செய்தால் போதுமே என்று எவரும் நினையாதீர். ஏன், எப்போது இறப்போம் என்று எவருமே அறிந்துகொள்ள இயலாது. அதனுல், அறஞ் செய்ய வேண்டுமென்பதை எப்போது அறிந்துகொண்டீர்களோ, அன்றே அப்போதே விரத அனுஷ்டானங்களுள் உங்களால் இயலக்கூடிய ஒன்றையாவது செவ்வனே அறிந்து நியதியாக—கட்டுப்பாடாகக் கடைப்பிடியுங்கள். அது ஒன்றே அழியும் இந்த உடலோடு தடைபட்டு நில்லாது ஆன்மாவாகிய உங்களுக்கு அழியாத துணையாகி உங்களைத் தொடர்ந்து வந்து உறுதி பயக்கும்.

ஒருவரது [illegible] வமே ''பிரமசரியம்'' என்ற நிலை. அதுவே முதற்படி. அப்பருவத்திற் கடைப்பிடிக்கும் விரதமே அவரை மனிதராக்கவல்லது. ''பிரமம் சரதி-இதி பிரம்மசாரி'' பிரமம் — பரம்பொருளாம் இறைவன் ஒருவன் உளன். சரதி-எனத் தேடி அறிபவனே. பிரமசாரி-மாணுக்கன். ஆணுயினும் பெண்ணுயினும் இந்த நிலை எவருக்குமேயுண்டு. இந்த உண்மையை எல்லோரும் அறிந்துகொள்ளுவதில்லை.

இக்கால மாணவரிடத்தே ''நீ எதற்காகப் படிக்கிருய்'' என்று எவராவதுகேட்டால், ''நான் இன்ன உத்தி

க. வை. ஆ. சர்மா

யோகத்தை விரும்பிப் படிக்கிறேன்'' என்று ஏதோ ஒன்றைச் சொல்லிவிடுவார்கள். ''நான் உலகியலை அறிந்து வாழப் படிக்கிறேன்'' என்று சொல்லுவோர் மிக மிகச் சிலர். உலகியலை அறிந்து வாழுதல்-நேர்மையான வழியில் பொருளைத் தேடி, அதன் உதவி கொண்டு தனது பிறவியின் கடன்களைத் தீர்த்து நிறைவேற்றுதல்.

''கடவுள் நமக்கு இந்தச்
சிரத்தைத் தந்தது
[illegible]
போதே கடவுளை
வணங்கி முத்தியின்பம்
பெறும்பொருட்டேயாம்''
—ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.

''கற்றதனுல் ஆய பயன்
என்கொல வாலறிவன்
நற்றுள் தொழார் எனின்''
—திருவள்ளுவர்.

கடவுள் வழிபாடுஇல்லாத கல்வியினுல் ஆகும் பயன் ஒன்றுமில்லை. அது கல்வியேயன்று என்பது அறிஞர் கண்ட முடிபு. அதனுல், மாணவ நிலையில் நின்று, படிக்கும் பருவத்திலேயே நாம் எமக்கு இயன்ற ஒரு விரத அனுட்டானத்தை முறையாகக் கடைப்பிடித்து வரவேண்டும். விரதங்கள் எமது உள்ளத்தைப் புனிதமாக்கவல்லன.

''விரதம்'' என்றவுடனே அது எம்மைப் பட்டினிபோடுவது என்ற நினைவு தான் மக்களிடையே பொதுவாகத் தோன்றுகிறது. உண்மையான கருத்து அதுவன்று. உணவை உட்கொள்ளாதிருப்பதுமாத்திரம் விரதமாகாது. உண்ணுதிருப்பது உடலைக் கட்டுப்படுத்துவதற்கு ஒருபாயம். எப்போதுமே தெய்வ சிந்தனையோடு வாழ்வோமாயின் எமக்கு எவ்வித இடர்ப்பாடுமில்லை. உலக மாயையால் மறைப்புண்டு செக்கு மாடுபோல உழைக்க முற்படும்போது இறைவனை மறந்துவிடுவோம். ஆகவே, இறைவனை நினைக்கச் செய்வனவே விரதங்கள்.

பகுத்தறிவு படைத்துள்ள மக்கள் பாதகச் செயல்களை எப்போதுமே விலக்கி ஒழுகவேண்டியவர்கள், அறியாமை காரணமாக அறிந்தும் மறதிகாரணமாக எப்போதேனும் தவறு செய்ய நேர்ந்தாலும், விரத தினங்களில் மிக விழிப்பாக இருந்து பாதகச் செயல்களை விலக்கிக்கொள்ளவேண்டும். எவரையும் துன்பப்படுத்தும் எந்தச் செயலும் பாதகச் செயலாகும். கொலை, களவு, கள், காமம், குரு நிந்தை என்பன பஞ்சமாபாதகங்கள். பொய்யும் இவற்றுள் அடங்கும்

மனம், வாக்கு, காயம் ஆகும் இம் மூன்றும் தூய்மையுற அனுட்டிக்கப்படவேண்டியனவே விரதங்கள். தீய சிந்தனைகளைத் தூண்டக்கூடிய எந்தச் செயலையும் விரத தினத்தில் விலக்க வேண்டும். பிறரது உள்ளத்தைப் புண்படுத்தும் வார்த்தையைப் பேசலாகாது. அதனைத் தடுப்பதற்கு வழி சிவநாமத்தை இடைவிடாது உச்சரித்தலேயாகும். உடலைக் கட்டுப்படுத்தவே உணவைச் சுருக்க வேண்டும் என்பது. மனத்திலே அழுக்கை வைத்துக்கொண்டு, நீரில் மூழ்கித் தூய ஆடை தரித்துக் குறி வைப்பதனுல் ஒருபோதும்

(V-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை (IIIம் பக்கத்தொடர்ச்சி)

இருந்தால், என் காதல் வாழ்வில் தலையிட்டவர்களைக்கண்டு என் மனம் களிப்படைந்திருக்காதா? இல்லை, அவர்களை மீண்டும் காண வேண்டும் என்றஆவல்தான் ஏற்படாதா?

நான், அவருடன் பழகுவதை அறிந்த என் பெற்றோர், 'சாதி, அந்தஸ்து' ஆகியவைகளைக் காட்டி, அவரை மறக்கும்படி சொன்னார்கள்.

சிரிப்பதா அல்லது அழுவதா?

அவரை நான் ஏன் மறக்கவேண்டும்...? என் மனதில் இடம் பெற்றிருந்தால் அல்லவா அவரை நான் மறப்பதற்கு?

உண்மைக் காரணத்தை மறைத்து, ''வயதில் மூத்தவள்-நான்'' என்ற காரணத்தைக் காட்டி என்னை மறக்கும்படி அவருக்குக் கடிதம் எழுதினேன்.

அதன் பின்பு,

அவரை நான் சந்தித்த பொழுது...

அடிபட்ட நாகம்போல் சீறினார். தன் முரட்டுக் கைகளினால் என்னைப் பிடித்து இழுத்தார். அவர் கைபட்ட இடம் 'விண், விண்!' என்று வலித்தது. நானும் அவரைப் போல் காதலித்திருந்தால், அவருடைய முரட்டுப்பிடி அன்புப்பிடியாக இருந்திருக்குமோ, என்னவோ?

தன் நீண்ட கைகளினால் என்னை வளைத்து தன் அகன்ற மார்பினில்-

யாழ்ப்பாணத்தில் இப்படி ஒரு சம்பவம் நடந்திருந்தால் நான் நாடு கடத்தப் பட்டிருப்பேன்.

''சீ, மிருகமே...! கையை விடு!'' என்று கூறியவண்ணம் அவர் பிடியிலிருந்து திமிறினேன். எப்படித்தான் அந்த வார்த்தைகள் சிதறினவோ? குரு பிடியைத்தளர விட்டாலும், அந்தக் காட்சி என் இதயத்தில் பதிந்து விட்டது.

குரு போய்விட்டார்.

இதைப்போன்ற எத்தனையோ நிகழ்ச்சிகளைப் பார்த்தும் பாராததுபோல், லயம் தப்பாது ஓடிக்கொண்டிருக்கும் காலம் என்ற தொழிலாளி உரிமையை எதிர்பாராது தன் கடமையைச் செவ்வனே செய்து கொண்டிருந்தான்.

என்னை மறப்பதற்காக, என் எண்ணத்தைத் தன் நினைவில் இருந்து அகற்றுவதற்காக, குரு, குடிக்கத் தொடங்கினார்.

மனிதன் தன் சுயஉணர்வில் இருக்கும் பொழுது, தன் மன வைராக்கியத்தினால் மனதைக் கட்டுப்படுத்தி, காலகதியில் எதையும்மறக்க முடியும். போதைதரும் பானங்களை அருந்தியவுடன், அதன் ஆட்சி மங்கியவுடன் மனிதனின் அடிப்படைத் தீயகுணங்கள் தலைகாட்டுவதுமன்றி, எதை மறக்க நினைக்கின்றோமோ அதுவே திரும்பத்திரும்ப நினைவில் வர, மீண்டும் போதைதரும் பானம் பருக-

தூ! அவளும் ஒரு பெண்ணா?... பசப்புக்காரி... மானங்கெட்டவள்...''- காதலி சுரேகாவான எனக்கு காதலன் குருவினால் அவர் போதையில் இருந்த பொழுது, தாராளமனதுடன் தயக்கமின்றி வழங்கப்பட்ட கௌரவப்பட்டங்கள்தாம், இவை.

கல்லூரி முழுவதும் என்னைப் பற்றியே பேச்சு. குரு குடித்து, தன் சுய நிலையை இழந்து, மறந்து கிடப்பதைச் சுட்டிக்காட்டி, என்னை மறைமுகமாகத் தாக்கினர், சிலர்.

வீரன் அம்புகளை நெஞ்சில் மாத்திரம் ஏற்கின்றான். ஆனால், பெண், நஞ்சு என்னும்அபவாதச்சொற்களான கொடிய சொல் அம்புகளை வாழ்நாள் முழுவதும் உடல் எங்கிலுமே ஏற்றுக்கொள்ளுகிறாள்.

அடைபட்டுக்கிடந்த என் மென்மையான பெண்மனம் தலைநீட்டி எட்டிப் பார்க்கத் தொடங்கியது. என்னால் ஒருவர் அழிந்துபோவதைக் காண நான் விரும்பவில்லை. நான்செய்த ஒரு தவறுக்காக -'நானும் காதலிக்கிறேன்' என்று சொல்லிய ஒரே ஒரு வாக்கியத்திற்காக -நான் அவரைக் காதலிக்க முயன்றேன்; என் இதயத்தைப் பக்குவப்படுத்தினேன்.

என்னால் யாரையும் காதலிக்கமுடியுமா? வாழ்க்கையின் தன்மையை அலசி, அலசி ஆராய்ந்தேன். வாழ்க்கையில் ஈடுபடாமலேயே வாழ்க்கையின் தன்மையை அறிய முயற்சிக்கும் அறிஞன் போலவும், தொழிலாளரின் அடிப்படைத் தேவையை உணராது தொழிலாளர்களுக்காகத் தொழிற்சங்கம் ஸ்தாபிக்கும் முதலாளிகள் போலவும்தான் என் நிலைமை.

இக்கால பலவிமர்சகர்கள் எழுத்தாளர்களின் படைப்புகளைத் துருவித் துருவி ஆராய்ந்து, குறைகளைத் தேடிக்கண்டு பிடித்து, வெளிப்படுத்திப் பெருமைப்படுத்துவது போல, காதலின் தன்மையை ஆராய்ந்து ரசிக்க என்னால் முடிகின்றதேயன்றி, அதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லையே.

எல்லோரும் என் புறஅழகைத்தான் காதலிக்கின்றனர். என் அழகு போனால்...? என் வாழ்வு? என் கவர்ச்சி தரும் அழகு இருக்கும்வரை ''கண்ணே! கனியே!'' என்று கிறக்கத்துடன் காதல் ததும்பப் பேசி, என் 'சோஷியல்' வாழ்க்கையைப் பாராட்டிப் பேசுபவர்கள், என் அழகு அழிந்தவுடன், அதனை ரஸித்தவர்களே என் கடந்த கால நடத்தைகளைக்குத்திக்கிளறி சந்தேகக் கண்கொண்டு பார்த்தால் நான் என்ன செய்வேன்?

நான் சாதாரண மனநிலையைக் கடந்துஅப்பாற்போய் விட்டேன். என்னை நானே கெடுத்துக் கொண்டேன். என் வரையில் இனிமேல் என் வாழ்வு ஒருகனவு. பிறர் வாழ்வதைப் பார்த்துப்பெருமூச்சுவிட முடியுமேயன்றி, என்னால் வாழமுடியாது.

அன்றொருநாள்—

அவசர அவசரமாக என் தோள்களைவளைத்துக்கொண்டார். அவர் ஸ்பரிசத்தை நான் உணர்ந்ததாகத் தெரியவில்லை. அது என் இதயத்தைக்கூட தொடவில்லை. ஏன்...? உடலைக்கூடத் தொடவில்லை.

நான் செய்த ஒரு சிறு தவறுக்காக, நான் அவரைக் காதலிக்கமுயன்றும்என்னால் காதலிக்க முடியவில்லை. மழைத்துளியை ஏந்த சிப்பி வாய் திறந்துகொண்டு கரையினில் கிடக்கின்றது. அந்த மழைத் துளியை ஏந்தியவுடன், தன் வாயை மூடிவிடுகின்றது. என் இதயம் சிப்பியைப் போல அல்லாது, காதல்என்றமழைத்துளியை ஏந்தாது, ஒருவித நியாயமற்ற பைத்தியக்காரத்தனத்தினால், அந்தப்பைத்தியக்காரச்செய்கையைப்பெரிதாகக் கருதிதன் இதயமென்னும் வாயை மூடிவிட்டது. அதன் பலன்—

ஏற்கக்கூடியதை ஏற்று, கிடைப்பதைக்கண்டு மகிழாது, எதையும் புறத்தில் ஏந்தி, கடைசியில் எதையும் ஏற்காது ஏமாற்றத்திற்குள்ளாகின்றது.

அவரிடம் என் இதயத்தை ஈர்க்கும் நுண்ணுணர்வு இல்லை. என்னிடமோ உண்மை நிலையைப் புரிந்து ஏற்கும் சாதாரண மனம் இல்லை.

எதுதான் அவரிடம் இல்லாதுவிடினும் ''சுரேகா!...'' என்ற அவருடைய அந்த அழைப்பின் ஒலி என் இதயத்திலே அடிக்கடி மோதி, எதையோ என்னிடம் சொல்லுவது போல் தோன்றுகின்றது.

என் மரத்துப்போன பெண்மனம் விழித்த பின்பு ஏற்பட்ட பலனோ, என்னவோ? என்மனம் மரத்துப் போகமுன்பு, என் மனம் விழித்திருந்தால், என் வாழ்வில் 'நாதன்கள்' குறுக்கிட்டிருக்க மாட்டார்கள். 'நாதன்' ஒருவன் குறுக்கிட்டிருப்பான். நானும்வாழ்ந்து கொண்டுதானிருந்திருப்பேன்.

பெண்ணின் மனம் தட்டுக் கெட்டவுடன்தான் வாழ்க்கை தொடங்குகிறது. அவ்வாறின்றி, மரத்துப் போயிருக்கும் என்மனத்தை கத்தி கொண்டு சுரண்டத் தொடங்கினால் அதன் வேதனையிலேயே என் உயிர் பிரிந்துபோகும்.

இருமனம் ஒருமித்த வாழ்வு எனக்கு இனிமேல் இல்லை. பிறருக்காகக்கல்யாணம் செய்து, வாழ்ந்துகாட்டும் இயந்திர வாழ்க்கையைத்தான் என்னால் வாழ முடியும்.

என் மனம் என்றும்காதலை ஏற்கமாட்டாது. ஏற்பதற்குத்தகுந்தவாறு என் மனம் படைக்கப் பட்டிருந்தாலும் அந்த மனதை ஏற்கப்படாதவாறு நான் ஆக்கிவிட்டேன். பிறப்பால் மனிதன் உயர்வை அடையவில்லை. வாழ்வின் தன்மையினால் தான் அவன் வாழ்வும் தாழ்வும் கணிக்கப்படுகின்றது.

என்னால் யாரையுமே காதலிக்கத்தான் முடியாதா?

என்னைப் பற்றியே நான் விமர்சனம் சொல்லக்கூடுமானால்—

என்னிடம் காதலிக்கும் மென்னுணர்வு படைத்த இதயம்தான் இல்லையே! என்னவோ?

(யாவும் கற்பனை)

---

## தொடர்நாடகம்

# அவன் சென்ற பாதை

### காட்சி பத்து

அம்பலவனின் குகை. மங்களம் இருக்கிறாள். அம்பலவன் ஓடி வந்து அவளின் கையைப்பற்றி இழுக்கிறான், அவள் எழுந்து சேலையை வரிந்து கட்டிக்கொண்டு சண்டைக்குத் தயாராகிறாள். அம்பலவன் பயந்தவன்போலப் பாசாங்கு செய்துவிட்டுப் பாடிப் பாடி ஆடுகிறான்]

அம்:- (பாடுகிறான்) (பாட்டு)

'விடுதலை கிடைத்ததடி
தங்கமே! தங்கம்
வேதனைகள் ஓடினவே
தங்கமே! தங்கம்!
கொடுமை தொலைந்ததடி
தங்கமே! தங்கம்!
கூனிக் குறுகல் இல்லை,
தங்கமே! தங்கம்!'

'நீயும் நானும் ஒன்று
சேர்ந்து தங்கமே! தங்கம்
நெருப்பும் ஒளியுமெனத்
தங்கமே! தங்கம்!
காயும் புளிப்புமெனத்
தங்கமே! தங்கம்!
காலமெலாம் வாழுவமே
தங்கமே! தங்கம்!'

'கோலக் குயில் மொழியே
தங்கமே! தங்கம்!'
கோதில் நில வொளியே
தங்கமே! தங்கம்!
சேலின் விழியாளே!
தங்கமே! தங்கம்!
சிந்தைக் கினியவளே!
தங்கமே! தங்கம்!'

மங்:- என்ன? ஐயாவிற்குத் தலைகால் புரியவில்லை. என்ன விடுதலையைக் கண்டு விட்டீர், இப்படித் துள்ளியடிக்க?

அம்:- துள்ளியடிக்கவா? உன்னைத் தூக்கிப் பந்தாட வேண்டும்போல இருக்கிறது. அவ்வளவு மகிழ்ச்சி!

மங்:- உனக்கும், உன் தலைவனுக்கும் பந்தாடத்தானே தெரியும்? அவர் செத்த தலைகளைப் பந்தாடுவார். நீயோ உன் குரங்குத்தனத்தால் என் தலையையே உருட்டி விளையாடுவாய். வேறு என்னதான் தெரியும் உனக்கு?

— "சொக்கன்" —

அம்:- (பொய்க்கோபத்துடன்) ஏய்! என்னை என்ன வேணுமானாலும் சொல், என் தலைவனைப் பழியாதே. எனக்குக் கெட்ட கோபம் வரும்.

மங்:- ஆஹா! பெரிய கோபக்காரர். அந்தக் கருணைவள்ளலைக் குறை சொன்னால், இவருக்குக் கோபம் வந்துவிடும். இதோ பார்! உன் தலைவனுக்கு முன்னாலே நடுங்கித் தொலைப்பதுபோல நடுங்காமல், அமைதியாய் நடந்த செய்தியைச் சொல். அதற்குப் பிறகு கூத்தடிக்கலாம். தெரிந்ததா?

அம்:- அப்படிக் கேள். என் தலைவன் எங்கள் இரண்டு பேருக்கும் விடுதலை தந்துவிட்டார். இனி நாங்கள் விடுதலை பெற்ற வானம் பாடிகள். பரந்த நெடுவானிலே எங்கும் பறந்து திரியப்போகும் பறவைகள். தெரிந்ததா? (செல்லமாகக் கன்னத்திலே தட்டுகிறான். மங்களம் போலிக் கோபத்தோடு அமுதனை விழித்துப் பார்க்கிறாள். அம்பலவன் கண்ணை மூடிக்கொண்டு பயந்தவன்போல நிற்கிறான்)

மங்:-ஏய்! என்ன? கண்ணை மூடிவிட்டாய். மூச்சும் போய்விட்டதோ, என்னவோ? (மூக்கில் விரலை வைத்துப் பார்க்கிறாள். அம்பலவன் அந்தக் கையைப் பற்றிப் பிடித்தபடி)

அம்:-மங்களம், மங்களம்! கோபியாதே! உனது பந்து போன்ற விழிகளை உருட்டி விழிக்காதே. அப்போது தான் கண்களைத் திறப்பேன். ஆமாம்!

மங்:- சரிதான்! கையை விடு. (கையை உதறிப் பறித்தபடி) கண்ணைத்திற (அம்பலவன் கண்களைத் திறக்கிறான்) ஏன் ஐயா! இடம் கொடுத்தால் தலையிலேயே ஏறி இருப்பாய்போல இருக்கிறதே. 'எங்களுக்கு விடுதலை என்று பன்மையிலே பேசுகிறாயே? அவருக்கு நான் எப்போது அடிமையானேன், விடுதலை பெற?

அம்:- நான் விடுதலையானால் நீ விடுதலை ஆனது மாதிரித்தானே?

மங்:-அது எப்படி? ''தென்னையிலே கூடு கட்டப் பனையிலே நெறி கட்டியதாம்'' நல்ல கதை!

அம்:- இந்தாடீ..........

மங்:-என்னய்யா, தாவிலே தொடங்கி டீக்கு வந்துவிட்டாய்.

அம்:- சும்மா இரடி! நீ தான் என்......

மங்:- 'என்'னுக்கப்பால் என்னவென்று தெரியவில்லையோ?

அம்:- நல்லாய் தெரிகிறது. இப்படி அருகில் வா. நீ என்.........(காதினுள்ளே) காதலி! (நாணிக்கோணுகிறான்)

மங்:- என்ன அது!

அம்:- காதலி! காதலி! அதாவது வருங்காலக்

(VIIம் பக்கம் பார்க்க)

---

குறள் விளக்கம்

## களைப்புல்

— பொ. சண்முகநாதன் —

வயலிலேயுள்ள பயிர்கள் காப்பாற்றப்பட்டு, அவை செழித்து வளர்ந்து உரிய பயனைக் கொடுக்க வேண்டுமானால் பயிர்களுக்கு மத்தியில் காணப்படும் களைகள் பிடுங்கப்படவேண்டும். களை பிடுங்குவதில் உழவன் தயக்கமோ தாமதமோ காட்டினால் பயிர் காப்பாற்றப் படமாட்டா. அப்படியே காப்பாற்றப்பட்டாலும் செழித்து வளரமாட்டா; அப்படியே வளர்ந்தாலும் உரிய பயனைக்கொடுக்க மாட்டா. களைப்புல்லால் எமக்கு எத்தவித பயனும் இல்லையென்றால் கூட 'போனால் போகட்டும்' என்று விட்டுவிடலாம். ஆனால் களையின் இயல்பு என்னவென்றால் அது தானும் பயன்படாது என்பதுடன், பயன்படும் பிற பயிர்களுக்கும் எமன் போன்றுவிளங்குவது. எனவேதான், களையைஎங்கே எப்போது யார் கண்டாலும் உடனே அதைக்கட்டாயம் களையவேண்டும் என்கிறார்கள்.

இதுபோலவே, நாட்டிலுள்ள கொடியவர்களையும் நாடாளும் மன்னன் கொலைத் தண்டனை விதித்துத் தண்டிக்கவேண்டும் என்கிறார் வள்ளுவர். நாடும் நல்லவர்களும்காப்பாற்றப்படவேண்டுமென்ற இலட்சியமுடைய மன்னன், கொலைகாரர். கொள்ளைக்காரர் போன்ற கொடியவர்களுக்கு கொலைத் தண்டனை விதிப்பதில் எந்த வித தயக்கமோ தாமதமோ காட்டக்கூடாது என்பது அவர்கருத்து. கொடியவர்களால் நாட்டுக்கும் எமக்கும் எந்த வித பயனும் கிடையாதென்றால் கூட 'இருந்து விட்டுப் போகிறார்கள்' என்று வாழாவிருந்துவிடலாம். ஆனால் அவர்களால் தான் நாட்டுக்கும் எமக்கும் எந்தவித பயனும் கிடையாது என்பதுடன், மாறாகப் பல இழுக்கும் இழப்புகளும் தொல்லைகளும் துயரங்களும் அல்லவா நேர்கிறது. அதனால்தான் அத்தகையவர்களுக்கு கொலைத்தண்டனை விதிப்பது அவ்வளவு அவசியமாகிறது.

நன்மை தீமைகளைஎதிர்த்துவெல்வதைப் பார்க்கிலும் தீமைகள் நன்மைகளை எதிர்த்து வெல்வதுதான் உலகில் எளிதாக இருக்கிறது. எனவே தான் கொடியவர்களுக்குக் கொலைத்தண்டனை விதிப்பதில் வள்ளுவர் களையை உவமைகாட்டி அவ்வளவு 'கடுமை'யாக நிற்கிறார் போலும்.

எப்படி வயலிலுள்ள பயிரைக் காப்பாற்ற வேண்டிய உழவன் களை எடுக்கவேண்டியது அவசியமோ, அப்படியே நாட்டிலுள்ள நல்லவர்களைக் காப்பாற்றவேண்டிய மன்னனும் கொடியவர்களை சங்காரம் பண்ணி ஒறுக்கவேண்டியதும் அவசியமாகிறது என்பதுவே இக்குறளின் கருத்தாகும்.

மரண தண்டனை அவசியமா இல்லையா என்பதில் கருத்துவேற்றுமை நிலவும் இக்காலத்தவர்களுக்குமேற்படி கருத்தை உள்ளடக்கிய கீழேயுள்ள குறள் சிந்தனைக்குரியதாகும்.

கொலையிற் கொடியாரை
வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனோடு நேர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாரச் சிறுகதை

"சுரேகா...!"

அன்புடன் அழைத்துக் கொண்டே கையிலிருந்த அந்த வாரப் பதிப்பை என்னிடம் கொடுத்து விட்டுச் சென்றார்-என் அன்னை.

அன்னை போய்விட்டார். அவர் அழைப்பிலை, அந்த அழைப்பின் ஒலியினால் ஏற்பட்ட நினைவு-

நினைவு என் நினைவில் நிழலாகத் தொடர்ந்தது.

அந்த அழைப்பின் ஒலி...

என்காதுகளிலே கிண்கிணி நாதம்போல் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது. அந்த அழைப்பின் ஒலியைக் கேட்டு, என் மனம் பரவசப்பட்டாலும், என் உள்ளத்திலே அந்த ஒலி எதுவித கிறலையும் ஏற்படுத்தவில்லை.

மனத்தை அடக்கியவன் வாழப்பழகிக் கொள்ளுகின்றான். அதற்கு அடிமையானவன் நாளுக்கு நாள், விநாடிக்கு விநாடி, சாகப்பழகிக் கொள்ளுகின்றான்.

நான் பிறந்ததின் பயனை அடைந்தேனா? அதுதான் இல்லை. என்றாலும், என் படைப்புக்களான சிறுகதைகள் மக்களின் உணர்ச்சியைத் தொட்டனவா? மனதில் தோன்றும் நிகழ்ச்சிகளுக்கு கற்பனைமெருகூட்டி, சிறுகதைகளாக எழுதுகின்றேன்.

ஆர்த்து எழுந்து வரும் கடல் அலை, கரையினிலே மோதி அழிகின்றது. அது அலையாக இருக்கும் வரை அதைப் பார்ப்போருக்கு எத்தனையோ விதமான உணர்ச்சிகளை ஏற்படுத்தி அழிகின்றது. அலை அழிந்தாலும், அது ஏற்படுத்திய உணர்ச்சி அழிகின்றதா? அது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் புதுமெருகு பெற்று புதுப்பொலிவுடன், இதயத்தோடு இதயமாகப் பூத்துக் குலுங்குகின்றது.

"சுரேகா...!"- குருநாதன் அழைக்கும் அந்த ஒலியும் என் இதயத்தை விட்டு மறைய மறுக்கின்றது...ஆனால் அந்த ஒலிக்குக் காரணமான அவர் - குரு?

என் கடிதத்தைப் படித்து விட்டு என்னைப்பற்றி என்ன எண்ணுவாரோ?

'சீ!... இவளும் ஒரு பெண்ணா? கனகத் தோட்டத்துக் கன்னிகைக்கு இதயம் என்பது இல்லையா? பெண்ணுக்கு இருக்க வேண்டிய மென்மை கூடவா இவளிடம் இல்லை?...'- இப்படித்தானே எண்ணி எண்ணி மனம் புழுங்குவார்.

'நான் பெண்ணா?... என் ஆசைகள் ஒவ்வொன்றும் வரம்பிற் குட்பட்டவையா? ...நியாயமானவையா?'

சிந்திக்க இருக்குமளவு சுதந்திரம் மனிதனுக்கு செயலாற்றுவதற்கும் இருந்துவிட்டால்—?

எதுவித சுதந்திரமும் ஒருவித கட்டுப்பாட்டிற்குள் அமையவேண்டும். கட்டுப்பாடற்ற சுதந்திரம், காலப்போக்கில் சுதந்திரம் பேசி தெருவழியே சுதந்திரமாகத் திரியும் மனிதனையேஅழித்துவிடும்.

ஆனால் நான்—

எனக்குள்ளேயே ஒரு உலகத்தை அமைத்திருக்கின்றேன். 'கனகத் தோட்டத்துலகிலே' நான் மனதாலும் காதலிக்கலாம். உடலாலும் தீண்டலாம். திருமணம் செய்தமறுநாளே விவாகரத்தும் கோரலாம். இது நாகரீகம். இது என் உலகத்திலே வசிப்பவர்களுக்கு மாத்திரம் நிரந்தரமாக அளிக்கப்பட்ட விசேட சலுகை.

குரு. 'சுரேகா!...' என்று என்னை அழைக்கும்பொழுது என் நெஞ்சத்திலே ஒரு சிறு சலனத்தை ஏற்படுத்தினாலும், என் இதயத்திலே அவரால் அதற்குரிய இடத்தைப் பிடிக்க முடியவில்லை.

நான் அந்தப் பேராதனைப் பூங்காவினுள், வளைந்து வளைந்து சென்று கொண்டிருக்கும் பாதையில் என் துவ்லிய இடைஒடிந்து விழும்படி அன்ன நடை போட்டு, நானே ஒரு பூங்காவாக,என் அங்கம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை மலராக அமைந்து, அசைந்து செல்லும் பொழுது, அதன் அழகைக் காண, ரசித்து மகிழ எத்தனையோ ஆண்கள் என் முன்னும்பின்னும் வருவதை எண்ணும் பொழுது —

என் அன்புக்காக - காதலுக்காக- இந்தக் கல்லூரி மாணவக்காளைகள்ஏன்உருக வேண்டும்? அதற்குப் பதிலாக நான், 'நீங்களோ பலர். நானோ ஒருத்தி. எப்படி நான் எல்லோரையும் விரும்புவது, காதலிப்பது?' என்று என் இதழ்களைக் கோணலாக்கி, அவர்களைப் பார்த்து கைகளை விரிக்க, ஏமாற்றம் தாங்காத மாணவர்களுக்கிடையே ஏன் விரக்தியேற்படவேண்டும்?'

இப்படி என்மனம் எண்ணிக் கணக்கிடுவது நியாயமா?

என்மனத்தின்தன்மையை என்னாலேயே புரிந்துகொள்ளமுடியாதபொழுது, காதலின் இறக்கத்திலே கவினுறக் கிடக்கும்கல்லூரிக்காளைகளுக்கா புரியப்போகின்றது?

"சுரேகா...!"- குருவின் அன்பின் ஒலிதரும் இன்ப அழைப்பு.

இதுவரை என்னைக் காதலித்து, கருத்தழிந்த ஆண் இனத்தின் ஐந்தாவது படைவீரன், குரு.

வீறு நடை போட்டு, விம்மும் நெஞ்சுடன் என்னை எதிர்நோக்கி வந்த குருவை, என் விழிப்பார்வையினாலேயே தடுத்து நிறுத்தினேன், நான்.

மருண்ட மான்போலானார் குரு.

"...இல்லை...வருகிறேன்!" என்று என்னைப்பார்த்து ஏங்கிய வண்ணம் சொல்லித் திரும்ப முனைந்தார் குரு. அவரின் முகத்திலேதான் அப்பொழுது எவ்வளவு ஏமாற்றம்!

என்னிடம் பேசுவதற்கு அவருக்கு என்ன விஷயம் உண்டு,காதலைத்தவிர? அவர் புரியப்போகும் காதல் விளையாட்டுக்களை அனுபவித்து உணர நான் விரும்புவதை அவர் அறியவில்லை. என்னால் காதலை ரசித்து மகிழமுடியுமேயன்றி, ருசித்து உண்ண முடியாது என்பதை எப்படி அவர் உணருவார்?

"சொல்லுங்களேன்!" என்றேன்.

அவரைப்பார்த்தேன். அவரும் பார்த்தார். அவரே கீழே குனிந்தார். ஆண் நானா, அவரா என்ற சந்தேகம்கூட எனக்கு எழுந்தது.

மிகுந்த சிரமத்துடன், "நான்... உன்னைக்... காதலி ...க்கின்...றேன்," என்று சொல்லிமுடித்தார்.

மூன்றே மூன்று வார்த்தைகள் கொண்ட சிறுவாக்கியம். இம் மூன்று சொற்களும், இதுவரை காலமும் அவருடைய தொண்டைக் குழிக்குள் கிடந்து, வேதனையைக் கொடுத்திருக்கவேண்டும். இன்றேல் எதிரிகளில் பத்துப்பேரை ஒரே முறையில் சுட்டு வீழ்த்திய பெருமிதம் அவர் முகத்தில் தெரிவானேன்?

நான் அவரைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். ஒரு பெண்ணினால், ஒரு ஆண் மகனை ஏறவைத்துபார்த்துக் கொண்டு இருக்கமுடியுமென்றால், அவளுக்கு எவ்வளவு துணிச்சல் வேண்டும்? ஒரு மெல்லிய புன்னகையைச் சிதறவிட்டு "ஆமாம்...... நானும்தான் காதலிக்கிறேன்!" என்று விடையாகச்சொல்லிவிட்டு விடுதி நோக்கிச் சென்றுகொண்டிருந்தேன்.

பலவித ஒலிகள் என்னைத் தொடர்ந்துவருவதுபோன்ற பிரமை. ஆங்காங்கே ஓங்கி வளர்ந்திருந்த பல நாடுகளில் இருந்து தருவிக்கப்பட்ட பலவகையான பனைமரங்களும் தங்கள் தங்கள் நாட்டு மொழியில் எதை எதையோ ஒன்றுக்கொன்று சொல்லி, விளங்கியும் விளங்காமலும் என்னைப் பார்த்துப் பரிகசிப்பதுபோல் எனக்கு ஒரு தோற்றம்.

என் சித்தம் குழம்பியது. நான் தவறுசெய்துவிட்டது போன்றநினைப்பு நான்விடும் தவறுகள் நாகரிகம் என்ற போர்வையில் மறைக்கப்படுகின்றன.

நான் சொல்லியது சரிதானா? உண்மையில் நான் அவரைக்காதலிக்கின்றேனா? என், இந்தப் பேராதனைக் கல்லூரி வாழ்வில் பருவங்கள், மாறிமாறி வருவது போல எத்தனையோ காதலர்கள் வந்துபோன வண்ணமாகவே இருக்கின்றனர். நான் அவரைக் காதலிக்கிறேனா? ஏன் அப்படிச் சொன்னேன்? காலம் கடந்த ஆராய்ச்சியா?

என்னால் பிறரைக் காதலிக்கமுடியுமா? காதலிக்கத் தான்முடிந்தாலும், அதைக் காதலாக ஏற்றுக்கொள்ள என்பெற்றோர்கள் சம்மதிப்பார்களா? நான் கனகத் தோட்டத்துக் காரிகையாக இருந்தாலும் 'சாதி' என்ற பழம் பெருமையில் ஊறித் திளைத்த உயர்குலத்து வம்சம் என் குடும்பம். உள்ளமறிய எதுவும் நான் செய்யலாம். ஊரறிய ஒன்றும் என்னால் செய்யமுடியாது. பொழுது போக்கிற்காக, என்மனத்தைச் சந்தோஷப்படுத்துவதற்காக, காதலில் திருப்தி காண்பதுபோல, காதல் உள்ளங்களைக் கருவறுப்பதற்காக, எத்தனையோ 'நாதன்களை' நான் காதலிக்கலாம். அக்காதல், உள்ளத்தைக்களிப்பில் ஆழ்த்தமுடியுமா,என்றால் விடை வினாக்குறிதான்!

வெகு அருமையாக, சில வேளைகளில், என் நீண்ட மென் விரல்களை அவர்முரட்டுப்பிடியில் சிறைபிடிக்க விட்டுக்கொடுப்பேன். அந்தப் பிடியிலே, அப்படிப் பிடித்து அவர் என் விரல்களை வருடிவிடும்பொழுது, எதுவித இன்ப உணர்ச்சியையும் நான் அடைந்ததில்லை. அது எனக்கு இதமாகவும் இருக்கவில்லை. என் உணர்ச்சிகள் மரத்துவிட்டனவா? 'அம்மா' என்று இன்ப உணர்ச்சியின் வேகம் தாங்காது இதயம் களிக்கவில்லை. அதற்குப் பதிலாக "ஓ" என்று வாய்விட்டுக் கதறவேண்டும்போல்தோன்றும். அவ்வளவு வலி!

அவர் மனதைச் சந்தோஷப்படுத்த விரும்பி, அவர் பிடியிலிருந்து கையைப் பறித்து, உணர்ச்சி வசப்பட்டவள்போல் நடிப்பேன். உடலைச் சிலிர்த்துக்கொள்வேன். டாக்டர் ஒருவரினால் தீண்டப்படும்பொழுது நோயாளி அடையும்உணர்ச்சியையே - உணர்ச்சியற்ற தன்மையையே என்னால் அடைய முடிகின்றது.

அவர் பார்வையில் காதலின் கனிவை என்னால் காண முடியவில்லை. காதலை விரும்பாத, காதலிக்கமுடியாத எனக்கு, காதலின் கனிவு எப்படித்தான் தெரியும்?

காதல் கதைகள் பேச வேண்டிய கண்கள், என் கருத்தைக் கவரவேண்டிய கண்கள், அரைகுறையாக மறைக்கப்பட்டு திரளவேண்டிய இடத்தில் திரண்டு, குறுகவேண்டிய இடத்தில் குறுகி, எப்படி எப்படி இருக்கவேண்டுமோ அப்படி அப்படியே இருக்கும். என்அழகு சொட்டும் அங்கங்களின் அமைப்பின் அழகைக்கடைக் கண்ணினால் பார்த்து,கள்ளமாகப்பருகுவதை உணர்ந்தேன். பார்ப்பவர்களின் உணர்ச்சி நரம்புகளை உந்தச்செய்யும் என் அங்கங்களின் அழகை அள்ளி விழுங்கி விடுவதுபோன்ற அவர் பார்வை-பட்டினிகிடந்தவன் பாலையும் பழங்களையும் கண்டவுடன், அதை விழுங்கும் எண்ணத்துடன் வெறித்துநோக்கும் பார்வை- அதை ருசித்துச்சாப்பிட விரும்பாது, பசிக்காகப் பறித்துச் சாப்பிட விரும்பும் தன்மை.

காதல் வாழ்வினால் ஏற்படப்போகும் இன்பத்தை எண்ணி, இறும்பூதெய்த வேண்டிய என் இதயம், இனமறியாப் பீதியினால் இருளடைந்து போவதைத்தான் என்னால் காணமுடிகின்றது.

நான்எங்கே பிறந்தாலும், வளர்ந்தாலும் எனக்கும் 'மனம்' என்று ஒன்று உண்டு தானே? அந்த மனம், சில வேளைகளில், தன் எண்ணங் கொண்டவுடன்'நானும் நல்லவாழ்வு வாழவேண்டும்' என்று நினைப்பது தவறா?

'என்னைப் பொறுத்தவரையில் எவரும் என்னை விரும்பவில்லை. என் அழகையே விரும்பினர் - இப்படி என் மனதில் ஒரு பிரமை அடிக்கடி தோன்றி, என்மனதைக் குழப்பி வருகின்றது என் அழகையேவிரும்பி என்னைக் காதலிக்கமுன்வரும் காதலர்களை, அதே அழகைக்காட்டி அவர்கள் இதயத்தைச் சிதறடிக்கவேண்டும் என்ற என் நினைப்பு நியாயமற்றதா?

பெண் மனதை அறிந்து, பெண்ணின் மனதை மகிழ்விக்கும், ஈர்க்கும் அந்த ஆற்றல் அவர்களிடம் இல்லையா?

(II-ம் பக்கம் பார்க்க)

"செந்தாரகை"

(இரத்ததானக் கவிதைப் போட்டியில்
3 ம் பரிசுபெற்ற கவிதை—9)

## நிகரிலாத போதம்

"சாரதா"

தானஞ் செய்தல் வேண்டும்-இரத்த
தானஞ் செய்தல் வேண்டும்;
தீன ருக்கி ரங்கி-மனிதர்
தியாகஞ் செய்தல் வேண்டும்.

ஊன மொன்றி னாலே-உதிரம்
ஒழுகிப் போகு மானால்,
ஈன மாயோர் சிவன்-தனைநாம்
இழக்க நேரு மன்றோ?

பிரச வத்தின் போது-இரத்தப்
பெருக்கு மெத்து மானால்
சுரணை இன்றித் தாயின்-உடலுஞ்
சுருண்டு போகு மன்றோ?

சிரம தான மாக-இரத்தஞ்
செலுத்து வோரி ருந்தால்,
மரண வாயில் நின்றும்-பலரை
வழிம றித்த தாகும்.

இரத்த சோகை யாலே-உடம்பு
இளைத்துப் போனால், மாற்று
இரத்த மேற்றி யேனும்-அவரை
இயங்கச் செய்ய லாமே?

உரத்த தேக முள்ளோர்-எவரும்
உலோப மின்றிக் கொஞ்சம்
இரத்த தானஞ் செய்தால்-புதிய
எழிலுண் டாகு மென்பர்.

வளரும் விஞ்ஞா னத்தால்-உலகில்
மலிந்து தோன்று கின்ற
விளைவு கட்குள் மெத்தும்-இயந்த்ர
விபத்துள் ளாவோர் மீள.

இளகு நெஞ்சத் தோடு-வலிய
இரத்த வங்கி சென்று,
உலக நன்மைக் கென்றே-இரத்தம்
உபக ரிப்பர் நல்லோர்.

ஆதி தொட்டு நம்முள்-அடங்கும்
அறிவி ன ஊற்றைத் தாண்டி,
சூதி லாது பாய-விடுத்தே
சுகவாழ் விற்கு ழைப்போம்.

சாதி பேத மின்றிச்-சிறிதும்
சமய பேத மின்றி,
நீதி யென்றி யார்க்கும்-உதவும்
நிகரி லாத போதம்.

## முருக்கம்பூ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை அரங்கம்

## பெண்களும் நடிக்கவேண்டும்!



கல்லூரிகளிலும், பஸ்களிலும் இன்னும் எத்தனையோ இடங்களில் பெண்கள் ஆண்களோடு பழகுகிருர்கள். பெண்களின் ஒழுக்கம் தவறுவதற்கு வேறு பல சந்தர்ப்பங்களை நமது சமூகம் ஏற்படுத்தி விட்டு பகிரங்கமாக நாடகமேடையில் நடிப்பதால் பண்பாடு பாழாகிவிடும் என்பதை நான் ஆதரிக்கத் தயாராக வில்லை ஆகையால், பெண்கள் நாடகங்களில் ஆண்களுடன் சேர்ந்து நடிப்பதற்கு தயங்கக்கூடாது.

— கலையரசு சொர்ணலிங்கம்

## இது விளம்பரம்

**தேவை**

பிரபல நிர்வாண நடிகையென்றும், 'பீ. பீ" என்றும் அழைக்கப்படுகின்ற பிரான்ஸ் நாட்டு பிரிஜட்பார்டோ 'தேவை' என்ற ஒரு விளம்பரம் போட்டிருக்கிருர். வேண்டிய பொருள் என்ன தெரியுமா?-'ஓர் ஏழாவது கணவன்.'

## ஹாலிவூட் டயறி

○ கிளியோபாட்ரா, மைபேர் லேடி போன்ற மிகப்பிரமாதமாக செலவு செய்து தயாரிக்கப்பட்ட படவரிசையிலே இடம் பெறப்போகும் ஒரு படம் 'பாரிஸ் நகரம் எரிகிறதா' (இஸ் பாரிஸ் பர்னிங்) என்ற படம் பாரமவுன்ட் படக்கம்பனியார் பல கோடி ரூபாய் செலவில் தயாரிக்கும் இந்தப்படத்தின் வெளிப்புறக் காட்சிகள் அண்மையில் பாரிஸ் நகரில் படமாக்கப்பட்டது.

○ ஹாலிவூட்டின் கவர்ச்சிக்கன்னி எலிசபெத் டெயிலர் 'பட்டர் பீல்ட் 8' என்ற படத்தில் நடிப்பதற்கு முதலில் மறுத்துவிட்டாராம். ஆனுல் அந்தப்படத்தில் நடித்ததற்காகத்தான் ஆஸ்கார் பரிசு கிடைத்தது. இதேபோல் மற்றெருரு சம்பவம் இப்பொழுது நடந்திருக்கிறது.

○ லூயிஸ்பீ மேயர் என்ற டைரக்டர் கீர்கார்ஸன் என்ற நடிகையை மிஸஸ் சிப்ஸ் என்ற ஒரு வேடத்தில் நடிக்க கட்டாயப் படுத்தியபோது, அந்த நடிகை மறுத்து, அப்படியே தரையில் உட்கார்ந்து சத்தியாகிரகம் செய்யத் தொடங்கிவிட்டார். டைரக்டர் அப்படியே அவரைத் தூக்கிக் கொண்டுபோய் 'காமிரா' முன்னுல் 'தொப்' என்று போட்டார். மிஸஸ் சிப்ஸாக அவர் நடித்த அந்தப்படம் வெளிவந்த பிறகு ஆஸ்கார் பரிசு கிடைக்காவிட்டாலும் கூட பிரபல நடிகையாகிவிட்டார் கீர் கார்ஸன்.

## வந்தவர்களும்

தேசிய அரசாங்கம் அமைந்த கையோடு தென்னிந்திய திரைப்படத் துறையைச் சேர்ந்த பலரும் இலங்கைக்கு விஜயம் செய்துவிட்டனர். யார் யார் எதற்காக வந்தார்கள் என்பதை அலசி பார்த்துவிட்டு விபரங்களைத் தந்திருக்கிருேம் இங்கே!

- ராஜசுலோசனு-நடனக்கச்சேரி.
- குமாரிசச்சு, மாடிலக்சுமி-நடனக்கச்சேரி.
- திரு. ஏ. வி. எம். மெய்யப்பசெட்டியார்-அவ்ரோ பிலிம் சம்பந்தமான விஜயம்.
- சித்ரா கிருஷ்ணசாமி-'ஆயிரத்தில் ஒருவன்' திரையிடுவது சம்பந்தமான ஆலோசனை.
- திரு. ஏ. எல். சீனிவாசன்-'ஆனந்தி', 'வசந்தி' படங்களின் விநியோக ஒப்பந்தமும், அந்நிய செலாவணி அனுமதியும்.
- எம். ஜி. ஆர்.-சரோஜாதேவி ரசிகர்களுடன் இரண்டறக் கலந்துவிட்ட இவர்களைப் பற்றி ரசிகர்களே கதைகதையாகச் சொல்லுவார்கள்!
- எஸ். எஸ் ஆர்.-விஜயகுமாரி-வில்லுப்பாட்டு நிகழ்ச்சி.
- 'டணல்' தங்கவேலு-சரோஜா-நாடக நிகழ்ச்சிகள்.

இதோ இவர்களும் வரவிருக்கிருர்கள் என காற்றினிலே வந்த ஒரு செய்தி கூறுகின்றது வருஷக்கடைசியிலே சரிபார்க்கலாமே!

- ஜெமினிகணேசன்-நிதியுதவி நிகழ்ச்சிக்காக!
- ரவிச்சந்திரன் (காதலிக்க நேரமில்லை) - நிதியுதவி நிகழ்ச்சிக்காக!
- எம். ஜி. ஆர். கோஷ்டி-விஷயம் ரகசியம்!
- எல். விஜயலட்சுமி-நடனக்கச்சேரி!

## வரப்போகிறவர்களும்



## சபாஷ், சாவித்திரி சபாஷ்!

தமிழ்த்திரைப்பட உலகில் சாவித்திரி இப்போது பெரிய 'பிஸி' நடிகை! ஒருபுறம் ஓயாத படப்பிடிப்பு. வேருெரு புறம் ஹைதராபாத்திலே 'நவராத்திரி' படத்தைச் சொந்தமாகத் தயாரிக்கும் வேலை!

சாவித்திரி ரசிகர்களுக்கு இதோ ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி! சாவித்திரி தன் சொந்தக் குரலிலேயே பாடுகிருர்-தன் சொந்தத் தயாரிப்பான தெலுங்கு நவராத்திரியில்! ரசிகர்களுக்கு தெலுங்கு தெரிந்தால் ரொம்பவும் ரசிக்கலாமே!

## கொட்டாம்புளி காலமானுர்

தமிழ்சினிமா உலகின் பழம்பெரும் நடிகரான கொட்டாப்புளி சென்னையில் காலமாகிவிட்டார்.

## கலை மந்திரி இவர்தான்!

1967 தேர்தலுக்குப் பிறகு தி. மு. க. மந்திரி சபை அமைந்து விடும். அந்த மந்திரி சபையில் அண்ணு முதலமைச்சர். நாவலர் நெடுஞ்செழியன் கல்விமந்திரி. கருணுநிதி நிதிமந்திரி. நான்தான் கலைமந்திரி!



(சென்னையில் நடந்த ஒரு கூட்டத்தில் எஸ். எஸ். ஆர். இப்படியாகப் பேசியுள்ளார்.)

# இவர் எப்படி?



டைரக்டர் ஸ்ரீதரின் 'கல்யாணப்பரிசு' படத்தில் 'நாயகி'யாக நடித்ததன் மூலம் இன்று தமிழ் திரையுலகிலே நிரந்தர 'நாயகி'யாக வெற்றிப் பவனி வந்துகொண்டிருக்கும் ஒரு நடிகையின் இடத்தைத் தனதாக்கிக் கொள்ளமுடியாமல் கோட்டைவிட்ட நடிகைதான் எல். விஜயலக்ஷ்மி.

'கல்யாணப்பரி'சில் 'நாயகி வேஷத்துக்கு 'விஜி'தான் முதலில் ஏற்பாடாகியிருந்தார். ஆனுல் ஏனே அவருக்கு 'ஸ்டார்' வேலைசெய்யாததால், இன்று மக்களின் ஆதரவு பெற்ற ஒரு பெரிய நடிகருடன் 'பேர்மனன்ற்' நாயகியாக நடிக்கும் நடிகைக்கு அந்த அதிர்ஷ்டம் அடித்துவிட்டது.

பரத நாட்டியம் மூலம் படாதிபதிகள் கண்களுக்குள் அகப்பட்டவர்தான் 'விஜி'. தெலுங்குப் படத்தில்தான் முதலில் ஆடினுர். ஆடி, ஆடி தமிழ் படத்துக்குள் நுழைந்து கொண்டார்.

ஒவ்வொரு படத்திலும் ஒவ்வொரு புது நடிகருடன் நடிக்கும் வாய்ப்பு விஜிக்குக் கிடைத்திருந்தது. பாதை தெரியுது பார், ஆளுக்கு ஒரு வீடு, தாயில்லாப்பிள்ளை, கவலையில்லா மனிதன்— புதுப்புது நடிகர்களுடன் இணைந்து நடித்து ரசிகர்கள் இதயத்தைக்கொள்ளைகொண்டார். கவலையில்லாத மனிதன், தாயில்லாப்பிள்ளை ஆகிய இரு படங்களிலும் 'விஜி'யின் நடிப்பு அழகாகவும் இயற்கையாகவும் அமைந்து ரசிகர்கள் மனதில் 'குறிப்பு' எழுதிக்கொள்ளவைத்தது — அவரைப் பற்றி.

### உடல் பெருக்காத நடிகை இவர்!

உடல் பெருத்துவிட்ட நடிகைகள் இன்று தமிழ்ப் படவுலகில் மலிந்துவிட்டனர். இவர்களையெல்லாம்வைத்துப்படமெடுத்தால், தயாரிப்பாளர்கள் படுத்துவிடவேண்டியதுதான்! ஆனுல் விஜி போன்ற ஒரு சில மெல்லிடையார்களை தயாரிப்பாளர்கள் பயன்படுத்தினுல் வெற்றிபெறுவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை! உடல் பெருக்காத ஒரு சில நடிகைகளில் விஜியும் ஒருவர்.

### 'விஜி' ஒரு துரதிர்ஷ்டசாலி!

'விஜி'யைப் பொறுத்தவரையில் அவர் ஒரு துரதிர்ஷ்டசாலியென்றே சொல்லத்தோன்றுகிறது. இல்லாவிட்டால், ஸ்ரீதர் படத்தில் நடிக்கும் 'சான்ஸை' இழந்திருப்பாரா? 'கொடுத்துவைத்தவள்' என்ற படத்தில் விஜி நடித்திருந்தாரல்லவா! அந்தப் படத்தில் அவர் நடித்த பல நல்ல காட்சிகளை-புகழைத்தரக்கூடிய கட்டங்களை 'சென்ஸார்' வெட்டிவிட்டார்களாம். பாவம்! விஜி ஒரு துரதிர்ஷ்டசாலிதான்! ஆனுலும் 'விஜி'யை பொம்மை பாலச்சந்தர் நன்ருகப் பயன்படுத்தியிருக்கிருர். தனது பொம்மையில் நல்ல சந்தர்ப்பத்தைக் கொடுத்து தூக்கிவிட்டிருக்கிருர்!

### இவர் எப்படி?

படத்தில் பார்ப்பதைவிட நேரில் பார்க்கும்போது கவர்ச்சியாகக் காட்சிதரும் விஜி பழகுவதற்கு இனியவர்; வளரத்துடிப்பவர்; தயாரிப்பாளர்களுடன் பகைத்துக் கொள்ளாதவர்.

'விஜி' இப்போது நடித்துக்கொண்டிருக்கும் பல படங்கள் புதிய படாதிபதிகளுடையதுதான்! பழைய படாதிபதிகளும் இவர் படத்தை விரும்பி 'புக்' பண்ணுமளவுக்கு 'விஜி' நடிக்கவேண்டும்.

கிடைக்கும் 'சான்ஸ்'களைக்கோட்டைவிடாது பயன்படுத்திக் கொண்ட 'விஜி' கட்டாயம் பெரிய நடிகையாகிவிடுவார் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமேடை

டி. எம். எம்.

## டிகால் விஜயம்

பிரெஞ்சு அதிபர் டிகாலின் ரஷ்ய விஜயம் மேற்குலகில் தீவிர சிரத்தையை ஏற்படுத்தியிருப்பதற்குக் காரணம் உண்டு. எனவே சோவியத் யூனியனில் அவரது நடவடிக்கைகளை மேற்கு நாடுகள் உன்னிப்பாய்க் கவனித்து வருவது இயல்பேயாகும்.

டிகால் 12 நாள் ராஜாங்க விஜயத்தை மேற்கொண்டிருக்கிறார். எந்த ஒரு மேற்கு நாட்டுத் தலைவரும் சமீப காலத்தில் ரஷ்யாவுக்கு இவ்வளவு நீண்ட விஜயத்தை மேற்கொண்டதில்லை என்பதும், அதே சமயம், எந்த ஒரு மேற்கத்திய ராஜதந்திரிக்கும் அளிக்கப்படாத பெரும் வரவேற்பு மாஸ்கோவில் அவருக்கு அளிக்கப்பட்டதென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பிரெஞ்சுத் தலைவர், தனது நாட்டை சகலவித பந்தங்களிலிருந்தும் விடுவித்துவருகிறார் என்பது பலருக்குத் தெரிந்திருக்கும். வட அட்லாண்டிக் ஒப்பந்த ஸ்தாபனத்தில் (நேட்டோ)

## மேற்கும், கிழக்கும்

பல்லாண்டுகளாக அங்கம் வகித்த பிரான்ஸ், அதிலிருந்து வாபஸ் பெற முடிவு செய்திருப்பதும் தெரிந்திருக்கும். இந்த ராணுவக் கூட்டில் 14 ஐரோப்பிய நாடுகள் இருக்கின்றன. பிரான்ஸ் மேற்குலக பங்காளிகளில் ஒன்ருக இருந்தபோதிலும், ஐரோப்பிய விவகாரத்தில் அது அமெரிக்காவின் தலைமையை ஏற்கவிரும்பவில்லை. பிரான்ஸின் தேசிய கௌரவத்திற்கு அது ஒரு இழுக்கு என டிகால் கருதுவதே இதற்குக் காரணம். அதேசமயம், சரித்திரகாலப் பெருமை கொண்ட பிரான்ஸ் போன்ற ஒரு நாடு, இப்படிக் கருதுவதில் நியாயம் இருக்கவும் செய்கிறது. மேற்கத்திய கூட்டணியில் டிகால் புதிய வழியைக் காட்டுவதற்கு இதுவே காரணம்.

அமெரிக்காமட்டும் அரசியல், இராணுவ, பொருளாதாரத்துறைகளில் இவ்வளவு சக்தியுள்ள வல்லரசாக இல்லாமல் இருந்திருப்பின், ஐரோப்பிய நாடுகளுக்கு ஒரு விவேகமான டிகால்தான் வழிகாட்டியாக இருந்திருக்க முடியும்.

ஜெனரல் டிகால் ராணுவ தந்திரி மட்டுமல்ல. பெரிய ராஜ தந்திரியும் கூட. உள்நாட்டு, வெளி நாட்டுப் பிரச்னைகளை அவர் சமாளித்தவிதம் இதை உலகுக்கே நன்கு நிரூபித்துக்காட்டியது. வாரம் ஒரு அரசாங்கமாக மாறிக்கொண்டிருந்த பிரான்ஸின் உள்நாட்டு அரசியலை, ஸ்திரநிலைக்குக் கொண்டுவந்தது அவரே. பிரெஞ்சு குடியேற்ற நாடுகளின் பிரச்னைகளை சாம, பேத, தான, தண்டத்தின் மூலம் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப பயன்படுத்தி வெற்றிகரமாகச் சமாளித்தவரும் அவரே. இப்போது பிரான்சுக்கு பிரிட்டனைப் போல் பெரும்காலனிப்பிரச்னை எதுவும் இல்லை. பெரிய பெரிய

முதல் முக்கிய பிரச்னையாகும். ஐரோப்பாவின் அமைதிக்கு நேட்டோ, வார்ஸா ராணுவ ஒப்பந்தங்கள் பெரும் முட்டுக்கட்டையாக விளங்கிவருகின்றன. இந்த இரு ஒப்பந்தங்களையும் ஒழித்துவிடவேண்டும் என்பது கம்யூனிஸ்ட் உலகிலுள்ள சீன-ரஷ்ய சித்தாந்த கெடுபிடியில் நடுநிலைமை வகிக்கும் ருமேனியா போன்ற நாடுகளின் கருத்து. ஆனால் இப்படிச் செய்தால் ஐரோப்பாவில் கிழக்கு நாடுகளின் பலம் அதிகரித்துவிடும் என்பது அமெரிக்காவின் கருத்து, இந்தக் கருத்து வேறுபாடுகள் எப்படியிருந்தபோதிலும் நேட்டோவிலிருந்து பிரான்ஸ் வாபஸ் பெறும் நடவடிக்கையை அறிவித்ததன் மூலம், கிழக்கு நாடுகளுடன் அது இதர மேற்கு நாடுகளை விட அதிகமாக நேரடித் தொடர்பு கொள்ள நல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எனவேதான் தனது வழியைப் பின்பற்றுமாறு டிகால் இதர மேற்கு ஐரோப்பிய நாடுகளையும் கேட்டுக் கொண்டிருக்கிறார். மேற்கு நாடுகளுக்கெதிரான ரஷ்யத் தாக்குதல் ஒன்று நடைபெறுமானல், பிரான்ஸ் அதிலிருந்து தப்புவதற்கு டிகாலின் இந்த நடவடிக்கைகள் வழி துலக்கும். ஜெர்மனி உட்பட ஐரோப்பிய பிரச்னைகளையும், கிழக்கு, மேற்கு கெடுபிடிகளையும் தீர்க்க ரஷ்யாவின் ஒத்துழைப்பை அதிகமாக நாடும் டிகாலுக்கு-அமெரிக்காவின் சம்மதமின்றி சுயேச்சையாகவும், நேரடியாகவும் இவ்விஷயத்தை அணுகும் டிகாலுக்கு-மாஸ்கோ பெரும் வரவேற்பளித்ததற்கு இதுவே காரணமாய் இருக்க முடியும்.

சுருக்கமாகச் சொல்லப் போனால் பிரான்சை வெளிப் பிரச்னை எதுவுமில்லாத தேசமாக்குவதன்

பிரச்னைகளை டிகால் சமாளித்துவந்தபோது அவரது உயிருக்கு உலைவைக்கப் பல சதிகள் நடைபெற்றன. ஆனால் தீரமும், விவேகமும் அவருக்கு வெற்றியையே அளித்தன.

பிரான்ஸிலுள்ள நேட்டோ ஸ்தாபனங்களை வெளியேறும்படி கேட்டிருக்கிறார் டிகால். இதேபோல் ஜெர்மனியிலுள்ள தனது நேட்டோ படைகளை அடுத்த மாதம் வாபஸ் பெறவும் தீர்மானித்துவிட்டார். மொத்தத்தில் பிரான்சை எல்லாத் தளைகளிலிருந்தும் விடுவித்து, சுயேச்சையாக இயங்கும் ஒரு நிலைக்கு டிகால் கொண்டுவந்திருப்பது அவரது சாதனையின் பெருமைக்கு ஒரு எடுத்துக் காட்டு. கொள்கையில் வேறுபட்ட சீனவுடனும் நல்லுறவுகொண்டு, மேற்கு நாடுகளுக்கு முதலில் வழிகாட்டினர் டிகால். அணு சோதனைத்தடை ஒப்பந்தத்தில் பிரான்ஸ் கையெழுத்திடவில்லையாயினும், மனே தத்துவ ரீதியில், அணுசக்தி வல்லரசாக விளங்குவதன் பெருமையிலும், முக்கியத்துவத்திலும் அவருக்கு நம்பிக்கையிருக்கிறது.

முழுக்க முழுக்க பிரான்ஸின் எதிர்காலமும், ஐரோப்பிய பிரச்னையும் டிகாலின் கிழக்குநாட்டுத்தாக்குதலிலிருந்து அதைப் பாதுகாப்பதே டிகாலின் நோக்கம். எனவேதான் தனது ரஷ்ய விஜயத்திற்குமுன், மேற்கு நாடுகளுக்குக் கசப்பளிக்கும் பல பூர்வாங்க நடவடிக்கைகளை பல காலமாக அவர் மேற்கொண்டார் என்றும் சொல்லலாம். எதுவாயினும் பிரான்சின் நலனைப் பொறுத்தவரை டிகாலின் போக்கு புதுமையானது; ஆக்க பூர்வமானது. விவேகம் நிரம்பியது; பிறரது தயவில்வாழாமல் சொந்தக்காலில் நிற்கும் பலம் வாய்ந்தது என்பதை மறுப்பதற்கில்லை. டிகாலின் தேசபக்தியே இதற்குக்காரணம். அதேசமயம் டிகாலின் எதிர்கால நடவடிக்கைகள், வருங்கால ஐரோப்பாவின் தலைவிதியை நிர்ணயிப்பதில், தனது பங்கை வகிக்காமல் போகாது.

## பூட்டோ விலக்கம்

பாகிஸ்தானிய அரசியல் கிரிக்கெட்டில் சிறந்த துடுப்படி வீரராகவும், பந்துவீச்சாளராகவும், 'பீல்ட்ஸ்மன்' ஆகவும் விளங்கிய பூட்டோ, அரசாங்கத்திலிருந்துவிலகிக் கொண்டதால் அந்நாட்டின் வெளிவிவகாரக் கொள்கை மாறுமா எனக் கேட்கிறார்கள். ''மாருது. அப்படியேதான் இருக்கும்'' என அறிவித்திருக்கிறார் அயூப்.

7 ஆண்டுகளுக்கு முன் ஜனதிபதி அயூப்கான், ஆட்சியைக் கைப்பற்றியபோது 31 வயதான பூட்டோ அவரது மந்திரிசபையில் சேர்ந்தார். கடந்த 3 ஆண்டுகளாக வெளிவிவகாரமந்திரியாகப் பதவி வகித்த பூட்டோவுக்கு இப்போது 38 வயதுதான் ஆகிறது. ஆனால் இந்த 3 ஆண்டுகளில் பூட்டோ பெற்ற பிரபல்யமும், முக்கியத்துவமும் உலகத்தில் எந்த வெளிநாட்டு மந்திரிக்கும் கிடைக்கவில்லை என்பது உண்மை. பாகிஸ்தானில் அயூபுக்கு அடுத்த சக்திமிக்க மனிதராக விளங்கினர் பூட்டோ. பொதுவாக, பாகிஸ்தான் அரசியல் வானில் ஒளிவீசும் நட்சத்திரமாக இளம் பூட்டோ பிரகாசித்தார்.

பூட்டோவின் வெளிநாட்டுக் கொள்கை வெற்றிபெற்றதா அல்லது தோல்வியுற்றதா என்பது, அந்தக் கொள்கை எவ்வளவுகாலம் கடைப்பிடிக்கப் படுகிறதோ அதன் இறுதியில்தான் தெரியவரும். ஜனதிபதி அயூபின் விருப்பத்திற்கு மாறான ஒரு கொள்கையை பூட்டோ கடைப்பிடிக்கவில்லை. ஆனால் அதை அமுல் நடத்தும் விஷயத்தில்தான் இருவருக்கும் வித்தியாசம் உண்டு எனக்கூறப்படுகிறது.

இந்தியா விஷயத்தில், குறிப்பாக காஷ்மீர் சம்பந்தமாக பூட்டோ கடும்போக்கைக் கடைப்பிடித்து வந்தார். மேற்குநாட்டு ராணுவக் கூட்டில் ஒரு அங்கமாய் இருந்தும் கூட நிபந்தனையற்ற அமெரிக்க உதவியை அவர் எதிர்பார்த்தார். இந்த சுதந்திரப்போக்கு ஓரளவு வெற்றிகரமாய்ச் செயல்பட்டு வந்தது போல் தெரிந்தது. கம்யூனிஸ ஆக்கிரமிப்புக்கு எதிரான ராணுவக் கூட்டில் பாகிஸ்தான் சேர்ந்திருந்தும்கூட, சீனவுடன் அது நெருங்கிய நட்பை வளர்த்துக் கொண்டதற்கு பூட்டோதான் காரணம்.

[illegible] டாஷ்கண்ட் ஒப்பந்தத்தையும் பூட்டோ எதிர்த்ததாகக் கூறப்படுகிறது. அதேசமயம் சீன சார்புடையவர் எனக் கூறப்பட்ட பூட்டோ இளம் அரசாங்க, ராணுவ அதிகாரிகளிடையே பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆசியாவின் அமைதி அண்டைநாடுகளான இந்தோ-பாகிஸ்தான் அமைதியையே பெரிதும் பொறுத்திருக்கிறது, ஆனால் திரு. பூட்டோவின் பேச்சுக்கள் இந்த உறவுக்கு சதா தொல்லை கொடுத்து வந்தது என்பதை எவரும் மறுக்க முடியாது. எனினும் ஜனதிபதி அயூப், திறமையும், செல்வாக்கும் கொண்ட தனது வெளிநாட்டு மந்திரியை விரும்பியோ, விரும்பாலோ கட்டுப்படுத்த முடியாமல்போய்விட்டது என்பது சிலரது கருத்து.

அயூப் இப்போது தாமே வெளிநாட்டு மந்திரிப் பதவியைஏற்றிருக்கிறார். ராணுவஜெனரலாகஇருந்தாலும், நிதானப்போக்குடனும், முன்னைய கடுமை இல்லாத ஆக்க வழியிலும் இந்தியாவுடனன பிரச்னைகளை அவர் கையாள்வார்என்பது வேறு சிலரது கருத்தாகும்.

அமெரிக்கா, நிறுத்தப்பட்ட பொருளாதார உதவியை மீண்டும் ஆரம்பித்துவிட்டதால் பாகிஸ்தான் மீண்டும் மேற்குலக சார்பில் செல்லுமெனக் கூறப்படுகிறது. எதுவாயினும் பூட்டோவின் ''ராஜினமா'' சீனவுக்குச்சற்றே நஷ்டம். அமெரிக்காவின் போக்குக் காரணமாக மந்திரிசபையில் பூட்டோவுக்கு நிர்ப்பந்தம் அதிகரித்துவந்ததாகக் கூறப்படுகிறது. இப்போது பல நாடுகளில் சஞ்சாரம் செய்துவரும் சீனப் பிரதமர் சூஎன்லாய் விரைவில் பாகிஸ்தான் வரவிருக்கிறார்.

அமெரிக்க உதவி மீண்டும் ஆரம்பமாகி, பூட்டோவிலகியிருக்கும் சூழ்நிலையில் சீனப் பிரதமரின் விஜயத்தைப் பலர் உன்னிப்பாகக்கவனிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

சமீப வருங்காலத்திலில்லாவிட்டாலும், சில காலம் சென்றபின்பாவது பூட்டோ மந்திரிசபைக்கு மீண்டும் திரும்புவாராஎன்பது பாகிஸ்தானின்உள்நாட்டு வெளிநாட்டுச் சக்திகளின் திருப்பத்தைப் பொறுத்தே அமையும். எதுவாயினும் அவர் ஒரு திறமையான மந்திரி.

## விரதங்களும் நோக்கமும்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தூய்மை வராது, மனத்தூய்மைக்கு வாய்மை ஒன்றே போதுமானது.

''மனத்துக்கண் மாசில
னதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற''

''புறந்தூய்மை நீரான்
அமையும் அகத்தூய்மை
வாய்மையாற்காணப்படும்''

என்னும் இக்குறட் பாக்கள் இக்கருத்தையே விளக்குவன.

இனி விரதங்களை அனுட்டிக்கத் தொடங்கும்போது இன்ன பலனைப் பெற வேண்டி, இந்த விரதத்தை இன்ன முறையாக, இத்தனை வருடகாலம் அனுட்டிக்கப் போகிறேன் என்று சங்கற்பம் செய்துகொண்டு தொடங்கும் முறையும் இருக்கிறது. ஆனல், பலன் கருதிச் செய்யும் அறச் செயல், அறிவுடைய சான்றேரால் விரும்பப்படுவது அன்று. ''எம்பிரானே! தேவரீரை வழிபடுவதற்காக இந்த விரதத்தை அனுட்டிக்கிறேன்'' எனச் செய்காரிய நிச்சயம் (சங்கற்பம்) செய்வதே உத்தமமான முறை. ஏனெனில் —

''பலனை எதிர்பாராதே, கர்மாவைச் செய்'' என்பது கீதை. ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' — அப்பர் தேவாரம். ''வேண்டும் பரிசு ஒன்று உண்டென்னில் அதுவும் உன்தன் விருப்பன்றே''—திருவாசகம்.

மனிதராகிய நாமோ சிற்றறிவு உடையோம். நல்லது என்று நினைத்துக் கேட்கும் வரம் ஒருபோது எமக்குத் தீமை தருவதாகவும் நேரலாம் அதனல், அந்தப் பொறுப்பையெல்லாம் இறைவனிடத்தே ஒப்புவித்துவிட்டு வழிபடுவது ஒன்றே நாம் செய்தல் போதுமானது. இதனைக் கருதியே

''நன்றே செய்வாய்
பிழை செய்வாய்
நானே இதற்கு நாயகமே"
—என்றார் மணிவாசகர்.

தெய்வபரமான விரதங்கள் என்றும், எமது குல முன்னேரான 'பிதிரர் பரமான விரதங்கள் என்னும் விரதங்களை இரு பிரிவாக்கலாம்.

தாய் தந்தையர் இறந்த திதிகளாக ஆண்டு தோறும் வரும் சிரார்த்ததின விரதம் மாசம் தோறும் வரும் அமாவாசை விரதம், புரட்டாதி மாசத்தில்வரும் மகாளயச் சிரார்த்ததின விரதம், சித்திரை, ஐப்பசி மாசப் பிறப்புக்களான விஷு புண்ணிய கால விரதங்கள், ஆடி, தைமாசப் பிறப்புக்களான அயன புண்ணியகால விரதங்கள் என்பன பிதிரர் விரதங்களிற் சிறந்தவை. இவை கால எல்லை கருதாமல், அறிவு உள்ளவரையும் கடைப்பிடிக்கவேண்டிய விரதங்களாம்.

தெய்வபரமான விரதங்கள். விரதத்தையொட்டியனவாகவும், திதியைச் சார்ந்தனவாகவும், நட்சத்திர எல்லையாகவும், குறிப்பிடும் ஆலய வருடப் பெருவிழாத் தின எல்லையாகவும் பலவாருக அமையும். இன்ன இன்ன விரதங்கள் இன்ன இன்னமூர்த்தி வழிபாட்டுக்கு உரியவை என்றும் வேதாகம சாத்திரங்கள் பிரித்துக் கூறுகின்றன. எல்லா விரதங்களையும் எவரும் அனுட்டிக்க முனைவது சிரமசாத்தியமானது. ஆகவே ஒவ்வொருவரும் தமக்கு வாய்ப்பான ஒரு சில விரதங்களையாவது உரிய முறையில் ஒழுங்காகக் கடைப்பிடித்துவருதலே போதியது.

விரதங்களைக் கடைப்பிடிப்பதனல் ஆன்மலாபம் ஒரு புறமாக அமைய, ஓய்வின்றி உழைக்கும் உடற்சீரண உறுப்புக்களுக்கும் ஆறுதல் உண்டாகும். அதனல் நோய் நீக்கமும் பெறலாம். மூதறிஞர்களான முன்னேர் கடைப்பிடித்த விரத அனுட்டான நெறி முறைகள் யாவும் விரிந்த மனப்பான்மை கொண்டவை என்பதை உணர்ந்து, பின்பற்றி உய்தி பெறுவோமாக.

## டிரைவர் இல்லாத கார்

எதிர் காலக் கார் காரோட்டியில்லாமலேயே ஓடும் என்று இலண்டன் பல்கலைக் கழக எந்திரப் பொறியயல் தலைவரான பேராசிரியர் மெரிடித்திரிங் கூறினர்,

சாலையின் மேற்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள கம்பியினல் கார் செல்லும். அதன் வேகத்தைக் கட்டுப்படுத்த எந்திர மூளை முறையைப் பயன்படுத்த முடியும்.

''அதைப்போன்ற காரை வசய்யக்கூடிய நுட்ப அறிவு நம்மிடம் இப்போது இருக்கிறது. ஆனல் இன்னும் நிறைய ஆராய்ச்சி செய்ய வேண்டும். சோதனை அடிப்படையில் அதைச்செய்ய இன்னும் பத்தாண்டுகள் பிடிக்கலாம்'' என்று பேராசிரியர் திரிங் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுருட்டுக் கைத்தொழில்: ஆசிரியர்: க. குணராசா, வெளியீடு: யாழ். இலக்கிய வட்டம், மாநகர சபை, யாழ்ப்பாணம். விலை: ரூபா ஒன்று,

புள்ளி விபரங்களோடு சுருட்டுக் கைத்தொழில்பற்றியும், அது சம்பந்தப்பட்ட பலவிதமான தகவல்களையும், யோசனைகளையும் பூரணமான ஓர் ஆராய்ச்சிக்குப் பின்னர் நமக்கு நூல் வடிவாகத் தந்திருக்கிருர் சர்வகலாசாலை விரிவுரையாள

[மதிப்புரை வேண்டுவோர் ஒவ்வொரு புத்தகத்திலும் இரு பிரதிகள் அனுப்பவேண்டும்.]

ரும், பீ. ஏ. பட்டதாரியுமான திரு. க. குணராசா. அண்மைக் காலத்தில் ஈழத்தில் தமிழில் சிறு கதைகள், கவிதைகள், நாவல்கள், இன்னும் பல்வேறு விஷயங்கள் பற்றிய நூல்கள் மின்னல் வேகத்தில் வெளிவந்து கொண்டிருந்தபோதிலும், ஈழத்தின் பொருளாதார சம்பந்தமான இப்படியான ஒரு நூல் வெளிவரவில்லையென்றே சொல்லலாம். இந்தவகையில், இந்த நூலாசிரியரின் முயற்சி பாராட்டுப் பெறுகிறது.

யாழ்ப்பாணக் குடா நாட்டுக்கு வருடா வருடம் 70 லட்சம் ரூபாய் வருமானத்தைத் தேடிக்கொடுக்கும் பொருளாதார ஊற்றுதான்— சுருட்டுக் கைத்தொழில். ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இதனையே நம்பி இங்கு வாழ்ந்துகொண்டிருக்கின்றன. இப்படியான பெருமை தரக்கூடிய சுருட்டுக் கைத்தொழில் இன்னும் விருத்தி பெறுவதற்கான பல யோசனைகளை ஆசிரியர் தெரிவிக்கிருர்.

''காலத்தின் போக்கிற்கும், தேவைக்கும் இணங்க சுருட்டுத் தொழிலிற் சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சுருட்டுக்களை நாகரிகமாக சிகரெட் பெட்டிகள் போன்ற பெட்டிகளிலடைத்தல், சிகரெட்போன்று மெல்லியதாகச் சுருட்டுகல், ஆதியன புதிய நுகர்வோரைக் கவரச் செய்யப்படுபவை. இவை வரவேற்கத்தக்க, தேவையான மாற்றங்களே''.

வட மாகாணத்தில் எத்தனை 'சுருட்டுக் கைத்தொழில் நிலையங்கள் இருக்கின்றன, சுருட்டுக் கைத்தொழில் எத்தனை பிரிவுகளாக இயங்குகின்றன, சுருட்டுத் தொழிலின் தேவைகள், புகையிலை உற்பத்தி-இது போன்ற பல தகவல் இந்நூலில் உள.

சுருட்டுக் கைத்தொழிலின் எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதை இந்நூலில் ஆசிரியர் மிகவும் அழகாக விளக்கியுள்ளார்.

''1958-ம் ஆண்டு நிகழ்ந்த இனக் கலவரத்தின்பின் சுருட்டுக் கைத்தொழிலில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டது. வெளியூர்களில் சுருட்டுக் கடைகள் வைத்திருந்த தமிழ் வியாபாரிகள் கடைகளை விட்டுவிட்டுத் திரும்பி விட்டனர். அதுமட்டுமன்றித் தமிழரின் சுருட்டுக்களை ஆதரிக்கக் கூடாது என்ற ஒருவித இனவேற்றுமை சிங்கள மக்களிடையே பரவியிருக்கிறது. இதனுல் சுருட்டுக் கைத்தொழில் பாதிக்கப்பட்டது. இவற்றைக் கொண்டு பார்க்கும்போது யாழ்ப்பாணக் குடா நாட்டின் சுருட்டுக் கைத்தொழிலின் எதிர்காலம் உன்னதமாக இருக்குமென்று கூறுவதற்கில்லை;''

மொத்தத்தில் இந்நூல் எப்படி இருக்கிறது என்று நான் கூறுவதிலும் பார்க்க இரசிகமணி கனக செந்திநாதன் இந்நூலுக்கு அளித்துள்ள அணிந்துரையில் குறிப்பிட்டுள்ள ஒரு பத்தியை இங்கே தருகிறேனே!

''சுருட்டுப் புகைக்கும் எனது கவலை, நல்ல சுருட்டு எங்கே கிடைக்கிறது என்பதுதான்! ஒரு கடையிலும் நம்பி வாங்க முடியவில்லை. ஒரு கட்டுச் சுருட்டுகளுக்குள்ளேயே பல ரகங்கள் இருக்கின்றன. 'பேர் பெற்ற' சுருட்டுக்களைப் பற்றவைக்க ஒரு நெருப்புப் பெட்டி முழுதாகவேண்டும். எனவே 'நல்ல சுருட்டு எல்லாக் கடைகளிலும் கிடைக்க வேண்டும்' என்பதுதான்.

குணராஜாவின் இந்நூல் வளரும். சுருட்டைப் பற்றவைத்து அடிச் சுருட்டை எறிந்துவிடுவதுபோல் எறியக்கூடிய புத்தகம் அன்று இது. இப்படியான நூல்கள் தமிழில் இன்னும் வெளிவர வேண்டும்.''

—பாமா

# ஆரோக்கியப் பேரீச்சை

பேரீச்சை வட ஆபிரிக்கா, எகிப்து, அரேபியா முதலிய இடங்களில் சாதாரணமாக வளரும். இதன் பழம் இனிப்புச் சுவையாகவும் குணம் வெப்பமுடையதுமாக உள்ளது. ஒரு அவுன்ஸ் பழத்தில் 98 . 3 காலரிகள் இருக்கின்றனவென்ருல் எவ்வளவு சக்தி தரக்கூடிய உணவு என்பது தெளிவாகும். இச்சக்தி சர்க்கரை வடிவமாக ''குளூகோஸ்'' என்ற பெயரால் 70 வீதம் அடங்கியிருக்கிறது. இதிலுள்ள சர்க்கரைக்கும் சாதாரணமாக நாம் வாங்கும் கரும்புச்சர்க்கரைக்கும் வித்தியாசம் இருக்கிறது. பேரீச்சம் பழத்தில் இருக்கும் சர்க்கரைச்சத்து உடலில் இழையங்களுக்கு

— க. வேல்மணி —

அதன் தேவைகளுக்கு ஏற்ற முறையில் இயற்கை உணவாக அமைந்திருக்கிறது இது மரத்தில் பழமாகும்போதே ஓரளவு செரிக்கப்பட்டு விடுவதினுல் உடலில் சென்றதும் சக்தியாக உறிஞ்சப்பட்டு விடுகிறது.

பேரீச்சம்பழச் சர்க்கரையிலே போஷணைச்சத்துக்களான-சுண்ணும்பு-அயம்-புரோட்டீன் - வைட்டமின்கள் கலந்திருப்பது அதன் இன்னெரு விசேஷமாகும். சம அளவுள்ள இறைச்சியைவிட பேரீச்சம்பழத்தில் அதிக அளவில் அயம் (Iron) இருக்கிறது. பலவித உணவுச் சத்துக்களை இவ்விதம் ஒரு சம அளவிலே வைத்திருப்பது ஆரோக்கியத்தை விருத்தியாக்க இயற்கைகையாளும் முறையில் ஒன்ருகும். ஆனுல் கரும்பிலிருந்து கிடைக்கும் சர்க்கரையோ செயற்கை முறையில் தயாரிக்கப்பெற்றுஅதிகத்தித்திப்புள்ளது, அது ஒருவிதகாடிச் சத்தை உண்டாக்கி ஜீரண உறுப்புக்களையும் கழிவாய்க் கூறுகளையும் அரிக்கிறது. சர்க்கரையை எப்போதும் அதிகமாக உபயோகிப்பவர்களுக்கு இதனுலேயே வயிற்றில் புளிப்பும் இரைப்பையிலே கோளாறும் உண்டாகிறது. நீரிழிவுக்குக்கூட இது ஒரு காரணம் என்று கருதலாம்.

மேலே சொல்லப்பட்டவையிலிருந்து சாதாரணச் சர்க்கரையைவிட பேரீச்சம் பழம் மிகவும் விசேஷமான உணவு என்றும் உடல் சக்தியை அளிப்பதில் முக்கியத்துவம் வாய்ந்ததென்றும் தெளிவாகிறது.

குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை எவ்வளவு வேண்டுமானுலும் பேரீச்சம் பழத்தைச் சாப்பிடலாம். தீங்கில்லை. மேல்நாட்டு அறிஞராகிய ''மெனிகாப்'' என்பவர் குடலிலிருக்கும் அசுத்தக்கிருமிகளின் சுபாவத்தை மாற்றுவதற்குப் பேரீச்சம் பழம் உபயோகிப்பது சிறந்ததென்று கூறினுர். இதனுல் புளித்த கிருமிகள் புழுங்கும் கிருமிகள் நாசமாவதோடு ஓர் அளவு காடி பெருக்கும் நுண்ணணுக்களும் விருத்தியாகலாம்- அழுகச் செய்யும் அணுக்கள் பேரீச்சம்பழம் கலந்த உணவில் உயிர்வாழ முடியாது. ஆனுல் குடலிலே நன்மை செய்யும் அணுக்கிருமிகள் பேரீச்சம் பழத்திலிருந்து பெரிய சாதகங்களைப்பெற்றுக் கொள்ளுகின்றன.

மலச்சிக்கலால் கஷ்டப்படுவோர் பேரீச்சம்பழத்தை மதிய சாப்பாட்டிற்குப் பின்னர் 8 அவுன்ஸ் உண்ணல் நன்று. சாப்பிடுவதற்கு முன்னர் பழங்கள் பார்வைக்கு நன்ருக இருந்த போதிலும் அவற்றின் மேலுள்ள அசுத்தப் பொருள்கள் அகற்றப்படல் வேண்டும். அதற்கு

(VIII-ம் பக்கம் பார்க்க)

# மனைவிளக்காக மங்கையர் திகழ வேண்டும்

பேரறிஞர் மு. வ.வின் அருமை மாணவர் பச்சையப்பன் கல்லூரி விரிவுரையாளர் திரு. பாலசுப்பிரமணியத்தை சந்தித்து உரையாடும் வாய்ப்பு அண்மையில் கிடைத்தது.

உரையாடும்போது தங்கள் துணைவியார்! பொதுப் பணியில் ஈடுபடுவதுண்டா என்று வினவினேன். எங்கேயம்மா நேரம் கிடைக்கிறது. காலைமுதல் படுக்கைக்குப் போகும்வரை சமைத்தல், குழந்தைகளைப்பேணல் விருந்தினரை உபசரித்தல் என்று எத்தனையோ குடும்பப்பொறுப்புகளை இல்லாள் நடத்த வேண்டியிருக்கிறது என்ருர். நாட்டிற்கு நற்பணியாற்றும் நங்கையர் பற்றியும் தனது கருத்தை தெரிவித்தார். இளம்நங்கையர்கள் சமூகப்பணி புரியும் போது அவர்களை நோக்கிப் பல குறைகள் வந்துகொண்டிருக்கும். அப்பொழுது அவர்கட்கு பொதுப்பணியில் ஆர்வம் குன்றி. பிறர் கூறும் குறைகளைப்பற்றிச் சிந்தித்துச்சிந்தித்து மனம் தளர்வர். பெண்மை நிறைவெய்தி மலர்ச்சியுறுவது குடும்பப்பெண்ணுகத் திகழும்போதேயாகும். குடும்பப்பெண்கள் உத்தியோகம் பார்ப்பது உசிதமல்ல என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். இல்லத்தின் இருள் நீக்கி மாட்சியுறச் செய்ய மனையிலே தங்கியிருந்து மனையை ஒளிபெறச் செய்யவேண்டும். வருங்காலத்தில் நாட்டை வளமாக்கும் தமது புத்திரச் செல்வங்களை செம்மையாக வளர்க்கவேண்டும். சான்ருேர் இலக்கியங்களில் ஆண்கள் பொறுமையற்றவர்களாக ஒழுக்கம் குறைந்தவர்களாக எல்லாம் வர்ணிக்கப்படுகின்றனர். ஆனுல் பெண்கள் பொறுமையின் இருப்பிடமாக பண்பின் சிகரமாய் கற்புநெறி நிற்பவர்களாகக் காட்டப்படுகிறது. சில புலவர்களின் கற்பனையாக இருந்தாலும் நங்கையர்கள் நாட்டின் நல்வழி காட்டியாகத் திகழ வேண்டுமென்றே எல்லோரும் விரும்பினர்.

பெண்கள் குடும்பப் பொறுப்பைச் செம்மையாக நிறைவேற்றினுல் வீடும், நாடும் ஒளிபெறும் இத்தகு குடும்பச்சுடர் இதழில் இடம்பெற்றிருக்கும் திலகவதியாரின் கட்டுரை குடும்பத்திற்கு உகந்த கருத்துகளைக்கொண்டிருக்கிறது. எல்லா தங்கையரும் இல்லினை ஆள்பவராக, மனையினை மாட்சிசெய்பவராகச் செய்யக்குடும்பச்சுடர் நல்ல கருத்துக்களை இப்பகுதியில் இடம்பெறச் செய்யவேண்டும் என்ருர்.

— பூரணி



இப்பூச்சித்திரத்தை 'பிளேன்' துணியில் பன்னிரண்டு வயதுக்குட்பட்ட பிள்ளைகளின் சட்டையின் கீழ்ப்பகுதியில் தைத்தால் கவர்ச்சியைக் கொடுக்கும்.

— கே. சிவஞானவதி, புங்குடுதீவு.5.




ஓர் இலட்சம் பணத்திலிருந்து கிட்டும் இன்பத்தைவிட, ஓர் இலட்சியப் பெண்ணிடம் பழகிப் பெறும் இன்பத்திற்கு ஈடு இணையெதுவுமில்லை.

— பிளேட்டோ

## தேள் கொட்டும் விஷகடி அகற்ற....

ஒரு கிளாஸ் தண்ணீரில் நிறைய உப்பைப் போட்டுக் கரைத்தல் வேண்டும். அப்படியே சற்றுநேரம் வெய்யிலில் வைத்தல் வேண்டும், அழுக்குகள் அடியில்படிய மேலே தெளிந்த நீரை ஒருபோத்தலில் ஊற்றி மூடிவைத்திருத்தல்வேண்டும். தேள் கொட்டியவரின் கண்களில் மூன்று சொட்டு உப்புத் தண்ணீர் விட்டால் விஷம் இறங்கிவிடும்.

★

## இதோ பற்பொடி!

2 அவுன்ஸ் கிராம்பு, 2 அவுன்ஸ் லவங்கப் பட்டை; மிளகு 2 அவுன்ஸ், சாம்பிராணி 1 அவுன்ஸ்; கற்பூரம் 1 அவுன்ஸ் இவை அனைத்தையும் நன்ருய்வெயிலில் காயவைத்துக் கொள்ள வேண்டும். கற்பூரத்தை மாத்திரம் தனியாகப் பொடி செய்து கலந்து கொள்ளவேண்டும், படிகாரத்தை ஒரேகட்டியாக வாங்கிப் புதுச்சட்டியில் அல்லது புது ஓட்டில் வைத்துப் பொரித்துஎடுத்தல் வேண்டும் முதலில் நீர்ப்பாகமாகிப் பிறகு நுரைபோல் மாறிப் பொரிந்துவிடும். அதைப் பின் நன்ருய் பொடி செய்து கொள்ளவேண்டும். 12 அவுன்ஸ் சீமைச் சுண்ணும்பு வாங்கிப் பட்டுப்போன்று பொடி செய்து அனைத்தையும் ஒன்ருகப்போட்டு நன்ருகக் கலந்துகொள்ளவேண்டும். இப்பற்பொடி பற்களை பளிங்காக்குவதோடு உறுதியாகவும்வைத்திருக்கும்.

— சரசு சம்பந்தம்

## பட்டுத்துணியைப் பாதுகாக்க:

பட்டுப் புடவைகளைப் பூச்சி அரிக்காமல் பாதுகாக்க வசம்பு வேப்பங் கொட்டை இரண்டையும் பொடி செய்து ஆடைகளின் அடியில்வைக்கலாம். மற்றும்வேப்பந்தழைகளை துணிகளின் இடையே பரப்பியும் வைக்கலாம்.

## கனிந்த கனிகள்

நல்ல மனைவியின் புருஷன் பாக்கியவான்: அவன் ஆயுள் இரட்டிப்பாகும்.

ஃ

மனமெங்கு இல்லையோ அங்கு இடமில்லை; மனமெங்கு இல்லையோ அங்கு வாழ்வில்லை.

ஃ

நடந்துபோனவற்றிற்காக மற்றவர்கள்மீது குற்றம் கண்டுபிடித்துக்கொண்டிருப்பது தவறு. நம்முடைய முறைகளை நாமே உணர வேண்டும். மற்றவர்களில் குற்றம் காண்பதில் முற்படுவோமானுல் நாமே குற்றவாளியாவதோடு மேலும் சேவை செய்யமுடியாது போகும்,

தீமை செய்தவருக்குப் பதில் நன்மை செய்வதே தெய்வ குணம். நன்மை செய்தவருக்குப் பதில் நன்மைசெய்வதே மனித குணம் தீமைசெய்தவருக்கு பதில் தீமை செய்வதே மிருக குணம்.

ஃ

தன் உள்ளத்திலே கள்ளக் கரவடமாயிருப்பவர்கள், மற்றவர்களுடைய நல்ல நடத்தைகளையும் காரியங்களையும் கள்ளத்தனமாகவே மதித்துக் கொள்வார்கள்.

—உப. பி. ம. தாஸ்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நாட்டுப்பாடல் இலக்கியம்

# கடற்கரைத் தாமரை

— தென்புலோலி பண்டிதர் வீ. பரந்தாமன் —

வட்டுக்கோட்டை, பெரியார் மு. இராமலிங்கம் அவர்கள் (10-6-66) 'ஈழநாடு' இதழில் எழுதிய மறுப்பினைப் படித்தேன் அதில்,

''நாம் வாழும் நாடு இலங்கை. நாம் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட பாடல் இலங்கை நாட்டார் பாடல். இவற்றை அடியொற்றியே நாம் ஆராய்ச்சி செய்தல் வேண்டும்'' என்று எழுதியிருந்தார். இப்படி எழுதுவதற்கு என்ன பொருள்? இச் சொற்றொடரில் ஒரு கருத்து இருக்குமேயானால், அது முன் காட்டிய நாட்டுப் பாடலை இந்திய (அல்லது பிறதேயத்து) நாட்டுப் பாடலென்று நான் எழுதியிருப்பதாகவன்றோ பொருள்படும்? அப்படி நான் எழுதவில்லையே!

இந்தியாவில் எழுந்த தொல்காப்பியத்தையும் ஔவையார் பாடலையும் நான் ஆதாரங் காட்டியமை கொண்டே பெரியார் அவ்வாறு நினைத்தனர் என்று கருதுகிறேன். நான் கருதுவதற்கு ஆதாரம் போலவே அவர் எழுதிய மறுப்பில் அடுத்து அமைந்திருக்கும் சொற்றொடரும் இருக்கிறது. அது, ''தொல்காப்பியச் சூத்திரமும் ஔவையார் பாடலும் எதற்கு ஆதாரம்?'' என்று கேட்டுள்ளார்.

இந்திய நாட்டுப் பாடலெனில் அது சரியென்றும் இலங்கை நாட்டுப் பாடலெனில் அது குற்றமுடைத்தென்றும் கருதுவதற்கு இடமாக அமைந்திருக்கிறது அவரின் எழுத்து. அந்த நாட்டுப் பாடலில் குற்றமிருந்தால் அது எந்நாட்டார் பாடலாயினும் குற்றந்தான் என்று துணிந்து கூறவேண்டும்! இனி,

இலங்கையில் வழங்கும் நாட்டார் பாடல்கள் எல்லாம் இலங்கையர் எழுதியதென்று எண்ணமா? நாட்டார் பாடலை நாடோடிப் பாடல்கள் என்றும் சொல்வார்கள். நாட்டுப் பாடல்கள், ஊருக்கு ஊர் - நாட்டுக்கு நாடு நேராகவும் திரிந்தும் ஓடுவனவன்றோ? மட்டக்களப்பில் வழங்கும் பாடல் மட்டக்களப்பினர் எழுதியதென்று சொல்வாரோ? யாழ்ப்பாணத்தில் வழங்கும் பாடல் யாழ்ப்பாணத்தினர் எழுதியதென்று கூறுவாரோ? திருகோணமலையிலும் தென் புலோலியிலும் மன்னாரிலும் மட்டக்களப்பிலும் கண்டியிலும் ஒரே பாடல்கள் வழங்கவில்லையா? எனவே, வழங்கும் இடத்திலேயே நாட்டுப் பாடல்கள் இயற்றப்பட்டிருக்கவேண்டும் என்று எண்ணுவது தவறாகும்!

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் சங்ககாலந்தொட்டு இன்றுவரை இனத்தால் மொழியால் கலையால் பண்பாட்டால் வாணிகத்தால் குடியேற்றத்தால் நெருங்கிய தொடர்பு இருந்துவருகிறது என்பதை யாவரும் அறிவார்கள். எனவே, நாட்டுப் பாடல் இலங்கையிலேயே ஊருக்கு ஊர் ஓடித்திரிவதுபோல தமிழ் நாட்டின் கண்ணிருந்தும் இலங்கைக்கு வந்திருக்கலாம்! அப்படித் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் வழங்கும் ஒரே பாடல்களைத் தேவையானபோது எழுதுவேன்! ஆகவே நாட்டுப் பாடல்கள் இலங்கையில் வழங்கும் பாடல்கள் என்று கொள்வதன்றி இலங்கையர் இயற்றிய பாடல் என்று கொள்ளற்க. (பல பாடல்கள் இலங்கையிலேயே எழுதப்பட்டிருக்கலாம்)

தொல்காப்பியச் சூத்திரத்தையும் ஔவையார் பாடலையும் நான், ஆதாரம் காட்டக் கூடாதா? அவை தமிழ் மொழியில் தமிழுக்கென்று ஆக்கப்படவில்லையா? அல்லது தொல்காப்பியமும் ஔவை பாடலும் இந்தியத் தமிழ் இலக்கணத்துக்கும் இலக்கியத்துக்கும் மட்டுமா எழுதப்பட்டுள்ளன. இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களுக்கு அவை இலக்கண இலக்கியங்கள் இல்லையா? நிற்க,

''தொல்காப்பியச் சூத்திரமும் ஔவை பாடலும் எதற்கு ஆதாரம் என்று வினவியிருந்தார்கள்! இவ்வினா உட்பொருள் எதுவும் கொள்ளாமல் அறியாமல் தான் வினவும் வினாவாக எழுந்ததாயின், சென்ற கட்டுரையில் தந்த மாற்றத்தை விளக்கிக் கூறுகின்றேன்.

தொல்காப்பியச் சூத்திரம், நான்கு நிலங்களில் ஒரோவொன்று ஏனை நிலங்களோடு மயங்கிவரும் என்பதற்கும் ஒரு நிலத்திற்றோன்றும் மரம் விலங்கு பறவைகள் முதலிய கருப்பொருள்கள் மற்ற நிலங்களிலும் அருகிக் (சிறுபான்மை) காணப்படும் என்பதற்குமாகவே காட்டப்பட்டது. அவ்வாறு இலக்கணம் இருப்பதனால் அதற்கு இலக்கியமும் இருந்திருக்கவேண்டுமன்றோ? இக்காலத்தில் அந்நில மயக்கங்கள் காணப்படாவிடினும் அந்நாளிலாவது இருந்திருக்கவேண்டும்! என்னை? அவ்வாறில்லாமலிருந்தால் இலக்கணம் எழுதார்கள் அன்றோ! ஆதலினால் கடல் சார்ந்த நிலத்திலும் மருதக் கருப்பொருளாகிய தாமரை காணப்படலாம் ஒருகால் உலகில் ஓரிடத்திலாவது இம்மயக்கம் இல்லாமலா போகும்!

(11,5-66) 'ஈழநாடு' இதழில் பெரியார் அவர்கள், ''நறு நீர்த் தடாகத்தில் மலரும் தாமரைப்பூ கடற்கரையில் எப்படிக் கிடைக்கும்?'' என்று வினவியிருந்தார்கள்.

கடற்கரையில் நறு நீர் இன்றென்பதும், அங்கு உவர் நீர்தான் உண்டென்பதும் நன்னீரில் மலரும் தாமரைப்பூ உவர் நீரில் மலராதென்பதும் அல்லவோ அவ்வினாவின் உட்பொருள்! அவர் இக்கருத்தினைக் கொண்டிலரேல், கட்டுரையில் ''நறு நீர்'' என்ற அடைமொழி ஒழித்தன்றோ எழுதியிருக்கவேண்டும்! அவ்வாறன்றி நறு நீர்த் தடாகம் என்று அடை கொடுத்தோதியதே நறு நீர் உண்டேல் அங்கே தாமரை மலரும் என்ற கருத்தினராகலினன்றே! ஆகவேதான் கடற்கரையில் நன்னீர் பெறலாம், அவர் கருத்தின்படி அந்த நன்னீரில் தாமரையும் மலரலாம் என்று அதற்கு ஔவை பாடல் ஆதாரமாகவிருப்பதையும் எடுத்துக்காட்டி எழுதினேன். இதில் தவறுண்டோ பெரியீர்காள்!

இவ்வாறிருக்க, நன்னீரில் மலரும் தாமரை என்று முன்னெழுதி நன்னீர் இருந்தாலும் அது மலராது என்று பின் எழுதி முரண்பாடடையற்க.

''சொல்லுக சொல்லைப்
பிறிதோர் சொல்
அச்சொல்லை
வெல்லுஞ் சொல்
இன்மை அறிந்து''

கடற்கரையில் நன்னீர் உண்டு; அங்கு தாமரையும் மலருமே! இதனை, இலக்கணமும் இலக்கியமும் இருப்பதானும், உலகத்தில் இப்பொழுதுகூட ஓரிடத்திலாவது இருக்கலாம் என்றதும், முன் உதாரணம் இருந்து இன்று அழிந்திருக்கலாம் என்றதுமாகிய அனுமானங்களிலும் அறியலாம்! மேலாக,

முன் எனது கட்டுரையில், நாட்டுப் பாடல்கள் படியாத பாமரர் இலக்கியங்கள் என்றும் திரிவன சிதைவன என்றும் அவற்றின் இயற்கையைச் சுட்டிக் காட்டி அவற்றுள் சான்றோர் பிழை தெரிந்துரைக்கார் என்றுங்கூறி அவற்றின்பால் ஏற்படும் பிழையை என் மீதுரையற்க என்றும் எழுதியமையையும் நோக்காது பெரியார், ஏதோ நாட்டுப் பாடலை நானே எழுதி வெளியிட்டேன் என்பார் போல மீண்டும் மீண்டும் விளக்கமும் குற்றமும் காட்டுவது அவருடைய பெருமைக்கு அழகல்ல என்று கூறவிழைகிறேன்!

'கடற்கரைத் தாமரை' விவாதம்

# ஒரு நுண் நோக்கு

— எஸ். எல். சவுந்தரநாயகம் —

'ஈழநாடு' வார இதழ்களிலே மக்கள் கவிமணி வட்டுக்கோட்டை திரு. மு. இராமலிங்கம் அவர்களுக்கும், தென்புலோலியூர் பண்டிதர் திரு வீ. பரந்தாமன் அவர்களுக்குமிடையிலே நாட்டுப் பாடலொன்றின் மூலமாயெழுந்து நடைபெற்றுவருகின்ற இலக்கிய சர்ச்சையை அவதானித்து வாசித்து ரசித்து மகிழ்பவர்களிலே யானுமொருவனுவன்.

சாதாரண வாசகநேயருக்குப் புரியாத பல பண்டைய இலக்கிய நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டும் இலக்கியக்கண்ணாடியாகவும், முதிர்ந்தவாசகநேயருக்கு இன்பமூட்டும் தமிழ்ச்சுவைப் பெருவிருந்தாகவுமமையப் பெற்ற குறித்தவிவாதம்பயன்தரும் விவாதங்களிலொன்றாகும்.

பெண்:-

கடகரியின் மீதேறி
கடற்கரையே போறவரே
எரிதணலைத் தணிப்பவர்
மேல்
இருப்பவரைத் தருவீரோ?

ஆண்:-

எரிதணலைத் தணிப்பவர்
மேல்
இருப்பவரை நான் தந்
தால்
மறுபிறப்புப் பிறந்து
மறைப்பவரைத் தரு
வீரோ?

பெண்:-

மறுபிறப்புப் பிறந்து
மறைப்பவரை நான்
தருவேன்
இரணியனைக் கொன்றவ
னல்
என்மேலே தீண்டாதே!

19-4-66 இதழிலே மேற்காட்டிய விடுகதைக் கவிதையையும் அதன் வியாக்கியானத்தையும் கட்டுரை வடிவிலே பண்டிதரவர்கள் படைத்திருந்தார்கள்.

பண்டிதரின் கட்டுரைக்கு மறுப்புக் கட்டுரையாக 11-5-66 இதழில் 'முந்தையோர் சிந்திய முத்துக்கள்' என்னுந் தலைப்பில் ஒரு கட்டுரையை மக்கள் கவிமணி எழுதியிருந்தார்கள்.

அக்கட்டுரையிலே... பண்டிதருக்குக் கிட்டிய நாட்டுப்பாடல் சிதைவுற்றதொன்றெனவும் கீழ்க்கண்டவாறு அப்பாடல் அமையப்பெறுமானால் பொருட்சுவைமிக்கதொன்றாக விளங்குமென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

''மறபிறப்பு பிறந்தவரை
மறைப்பவரைத் தரு
வீரோ?
இருகைக்கும் வெகுமதி
யும்
தருவீரோ?''

இதுதான் மக்கள் கவிமணியின் உத்தேச திருத்தக் கவிதை.

இன்னும்......

1950-ல் திருமலை அன்பர் திரு. அ. ப. பொன்னையா அவர்களிடம் தான் வாங்கிய கீழ்க்காணும் நாட்டுப்பாடலையும் கட்டுரையில் வெளியிட்டிருந்தார்.

பெண்:-

அறுகாலுடனே கரி
மீதேறிக்
கரையோரம் போறவரே
எரிப்போரை நூப்போர்
மேல்
இருப்போரைத் தரு
வீரோ?

ஆண்:-

பிறந்தும் இருந்தும் இறந்
தும்
பிற்பிறப்புப் பிறப்
போரை
மறைப்போரைத் தரு
வீரா?
இருகைக்கும் வெகுமதி
யும்
தருவீரா?

பெண்:-

இரணியனை இருபிள
வாய்ப்
பிளந்தோரை
எறிந்து வந்தால் நான்
தருவேன்

சிற்சில சொற்களால் மட்டும்வேற்றுமைப்பட்டாலும் கருத்தினால் ஒற்றுமைப்பட்ட மேற்காட்டிய விடுகதைப்பாடலும்அதன்விளக்கமும்தான் சரியென்பது மக்கள் கவிமணியின் கூற்றென்பது தெற்றெனப்புலனாகின்றது.

சிருங்கார ரசம்சொட்டச் சொட்ட இன்பக்கதைகள் பேசி மகிழ்ந்து களிபேருவகைகொள்ளும் தனிமை வேளையிலே காதலர்கள் 'இப்படித்தான் உரையாட வேண்டும்' என்பது நியதியில்லை.

காதலன், காதலியிடம்... சிலாபவூர் முத்தாரத்திற்குச் சவாலிவிட்டு புத்தொளி பரப்பும் நித்திலப் பற்களின் மூடுதிரையாம் தெள்ளமுதூறும் கோவைக்கனிகளையும் (பிறந்தும் இருந்தும் இறந்தும் பிற்பிறப்புப் பிறப்போரை மறைப்போரையும்) கேட்கலாம்.

பத்தரைமாற்றுப் பசும்பொன்னில் வார்த்தெடுத்த செம்பொற்குடங்களையும் (மறுபிறப்புப் பிறந்து மறைப்பவரையும்) கேட்கலாம்.

அன்றேல் ஈழநாட்டு யானைத்தந்தத்தில் கடைந்தெடுத்து உயிரும் உணர்ச்சியும் ஊட்டப்பட்ட பேசும் பொற்சித்திரமான காதலியின் அங்கம் முழுவதையுமே இருகைக்கும் வெகுமதியாகக்கேட்கலாம்.

இன்னும் எதையெதையெல்லாமோ காதலன் காதலியிடம் கேட்கலாம்; கேட்பதாக இலக்கியங்கள் கூறுகின்றன.

அதேபோல் காதலியும், சினிமா நட்சத்திரப் பாணியில் நகங்களை வளர்த்திருக்கும் தன் காதலனிடம் இரணியனை வதைத்தவனை அகற்றிவருமாறு நேரடியாகவோ சூசகமாகவோ கூறலாம்.

அதற்கு மரபெதுவும் இருப்பதாகத் தெரியவும் இல்லை. அந்த இடத்தில் கவிமணி, பண்டிதர் இருவரினதும் விளக்கங்கள் ஒட்டியும் ஒட்டாமலும் வெட்டியும் ஒருவாறு கிட்டிவிடுகின்றன. காதலர்களிருவரும் கருத்தொருமித்துக் கூடல் இன்பத்தையே விளைகின்றனரென்பதை ஒப்புக்கொள்கின்றனர். இரண்டுபேர்களும் எடுத்துக்காட்டிய பாடல்களின் பொருளும் அப்படித்தானே!

ஆனல்...

''எரிதணலைத்
தணிப்பவர்மேல்
இருப்பவரைத் தருவீரா?''

என்கிற அடியிற்தான் சர்ச்சை ஆரம்பமாகின்றது. 'எரிதணலைத் தணிப்பவர் மேல் இருப்பவர்' தாமரை மலர் என்பதையும் இருவரும் ஐயம்திரிபற ஒப்புக்கொள்கின்றனர்.

'கடற்கரையிற் தாமரை மலரமுடியும்' என்பது பண்டிதர் கூற்று.

'கடற்கரையிற் தாமரை மலரமுடியாது' என்பது கவிமணியின் வாதம்.

இந்த விவாதத்தில் அடியேனும் கலந்து இரண்டுமதகரிகளின் நெருக்குதலின் பொழுதுஇடையிலகப்பட்ட சிறு கொசுவாகாமல், அல்லது ஒரு கட்சியிற் சேர்ந்து மற்றக்கட்சியின் உண்மைகளை மறைத்துக் காட்டும் கண்ணுள்ள கபோதியுமாகாமல் சுதந்திரமாக நின்று விளக்கந்தர விரும்புகிறேன். விளக்கப்புகுமுன் முதற்கண்...

(VIII-ம் பக்கம் பார்க்க)

## அவன் சென்ற பாதை

(II-ம்பக்கத் தொடர்ச்சி)

காதகி என்பது பொருள்! இப்பொழுது சொல். என் விடுதலை, உன் விடுதலையா, இல்லையா?

மங்:- (வெட்கத்தால் முகம் சிவக்க) சும்மா போங்கள்.

அம்:- என்ன, என்ன? 'போ'வுடன் 'ங்கள்' சேர்த்துவிட்டாய். கேதீச்சரநாதா! இந்த 'இங்கள் எப்பொழுதுமே தங்கிவிட வேண்டும். (கை கூப்பி மாதோட்டம் இருந்த திசைக்கு வணக்கம் செலுத்துகிறான்) இன்னும் ஒரு செய்தி,

மங்:- என்ன செய்தி சொல்லுங்கள்.

அம்;- வேண்டிய பணம், ஆடை, அணிகளையும் எடுத்துச் செல்லச் சொன்னான். அவையெல்லாம் அந்தக் குகையினுள்ளேதான் இருக்கிறது. எடுத்துச் செல்வோமா?

மங்:- இதோ பாருங்கள். அதுதான் வேண்டாம் என்கிறேன்.

அம்:- (கையைக் கேள்வியடையாளம்போல் வளைத்து வளைத்து) ஏன்? ஏன்? இந்தத் திரவியத்திலே எனக்கும் பங்கு இருக்கிறது. அமுதனோடு சேர்ந்து எனது உயிரைப் பணயம் வைத்துத் தேடிய செல்வம் இது. நியாயமாக அதிலே பங்கு எனக்குந்தான் கிடைக்க வேண்டும்

மங்:- இதோ பாருங்கள். கொலைபடிந்த அந்தச் செல்வம் எங்களுக்கு வேண்டாம். 'அழக்கொண்ட எல்லாம் அழப்போம்' என்பது பெரியார் வாக்கு.

அம்:- அப்படிச் சொல்லு. உனது தலைவியின் 'திருக்குறள்' பித்து உன்னையும் பிடித்துவிட்டதா? சரி; மங்களத்தாயே! தங்களின் சித்தம்.

மங்:- அது சரி. மாதவியைத் தனியாய் விட்டுப் போவதா?

அம்:- இதோ பார். நீ அழைத்தாற்போல அவள் வரப்போகிருளா? அல்லது நாங்கள்தான் இங்கு இருக்க முடியுமா? எல்லாம் மாதவி கவனித்துக்கொள்வான், நீ வா.

மங்:- எதற்கும் ஒரு தடவை அவளிடம் சொல்லி விட்டுவருகிறேன்.

அம்:- ஆகட்டும்! ஆனல் ஒன்று. உங்கள் உரையாடல், உன் தலைப் பின்னல் போல நீண்டு செல்லக் கூடாது. நினைவில் வைத்துக் கொள். இனி அமுதன் முகத்திற்பட்டேனே, தொலைந்தேன், விரைவில் வா.

மங்:- சரி!

(திரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நுண் நோக்கு

(VII-ம் பக்கத்தொடர்ச்சி

பலகாலம் நாட்டுப்பாடல்களுடன் ஒன்றித்து உறவாடி, தேடிக்கண்டெடுத்து, வளர்த்துப் பருவமாக்கி, களஞ்சியமாகத்திரட்டி மக்களரங்கில் உலவவிட்ட மக்கள் கவிமணியின் புலமைக்கும்; தென்புலோலியூர்தந்த தமிழ்க்கடல் திரு. கந்தமுருகேசனுர் அவர்களின் மாணவரான பண்டிதர் திரு. வீ. பரந்தாமன் அவர்களின் புலமைக்கும் தலைவணங்கிக் கொள்கின்றனன்.

எனது நோக்கு.

இடமோ கடற்கரை. நிலமோ நெய்தல் காதலர்களோ நெய்தல் நிலமக்கள். காதலனே யானைமீதேறிக் கடற்கரையின்கண் உலாச் செல்லும் பிரபு. பொருளாதார பலம் மிக்கவன்.

அத்தகைய தலைவனிடம் தலைவியானவள் ஒரு கப்பலையோ, நாவாயையோ, தோணியையோ, வள்ளத்தையோ, படகையோ ஏன் காதற்பரிசாகக் கோரியிருக்கக் கூடாது?

'எரிதணலைத்; தணிப்பவர் மேல் இருப்பர்' கஞ்சமலராகத்தான் இருக்கவேண்டுமா? அவர் (அது) ஒரு கப்பலாக, நாவாயாக, தோணியாக, வள்ளமாக, படகாக ஏன் இருத்தல் கூடாது? அப்படியிருந்தால் பொருள் சரிவராதா?

சரி! கமலமலரென்பதைத்தான் சரியெனக்கொண்டாலும் நுண்மான் நுழைபுலத்துடன் நோக்குங்கால் பிழையெதுவுந்தோன்றவில்லையே!

நெய்தல்நிலத் தலைவி பொருத்தி, தலைவன் பால் கப்பல், நாவாய், தோணி, வள்ளம், படகு போன்ற செயற்கைப் பொருட்களையோ, அன்றேல் சிப்பி, சங்கு, ஊரி போன்ற சாதாரண இயற்கைப் பொருட்களையோ காதற்பரிசாகக் கேட்பாளாயின் காதலன் எத்தகைய சிரமமுமின்றியே ஈந்துவிடமுடியும்.

அப்படிக்கின்றி ஆழ்கடலின் அடியிலுள்ள வலம்புரிச் சங்கு, முத்துப் போன்ற அசாதாரணப் பொருட்களைக் கேட்டாலுங்கூட கஷ்ட சாத்தியமாகவேனும் கொடுத்துவிட முடியும், ஏனெனில், நெய்தலிற் பிறந்து நெய்தலில்வளர்ந்து நெய்தலில்வாழும் ஒரு ஆண்மகனுக்கு-அதிலும் யானைமீதிவர்ந்து பொழுதுபோக்கக்கூடிய நிலையிலுள்ளவனுக்கு-கடல்படு திரவியங்களெதுவுமே அசாதாரணப் பொருட்களல்ல. அவைகள் அவனுக்குச் சாதாரணப் பொருட்களே.

எனவே உயர்ந்த நிலையிலுள்ளவொரு காதலினிடம் அவன் காதலி சாதாரணப் பொருட்களைக் காதற்பரிசாகக் கோருவது, அவனுடைய வீரத்தையும் ஆண்மையையும் அவமதிக்கும் செயலாகவும் முடியக்கூடும். ஆகையினுற்தான், நெய்தலுக்கு இட்டாய் பொருளாகவும் மருதத்துக்கே சொந்தமாகவுமுள்ள சரோருகமலரைக் காதற்பரிசாகக்கேட்கின்ருள், காதலி. நியாயமான கேள்விதானே!

அந்த நெய்தநில மங்கை நல்லாள், தன் மனங்கவர் காதலனிடம் கமலமலரைக் கேட்பது எவ்வண்ணந் திணை வழுவாக முடியும்?

காதலி ... கஞ்ச மலரைத் தரும்படிதானே கேட்கின்ருள். கமலமலர் கடற்கரையிலோ அன்றிக்கடல் சார்ந்த நெய்தநிலத்திலோ இருப்பதாகச் சுட்டிக்காட்டவில்லையே! அப்படிச் சுட்டிக்காட்டியிருப்பின் ஒருவேளை திணைவழுவாகக் கொள்ள முடியுந்தான்! அத்தகைய திணைவழுக்கள் நேரவிடாமற்கூட இயற்கைத்தாய் விளையாடிவிடுகின்ருள். மனிதனுல் வரையறை செய்யப்பட்ட திணைமரபுகளை மனிதனையே ஆட்டிப் படைக்கும் இயற்கையன்னைக்கு மாற்றியமைத்தல் அசாதாரணச் செயலல்ல. தன் செயல்கட்குச் சான்ருக...கடற்கரையிலே நெய்தல் நிலத்திலே- திணை வழுவாக- தாமரை மலரமுடியுமென்பதை, சிற்சில இடங்களில் இயற்கைமாதா நிரூபித்தும் காட்டியிருக்கின்ருள்.

அவைகளில் ஓர் இடம் மன்ஞருக் கணித்தாயுள்ள தள்ளாடி யென்னுமிடமாகும்.

ஆமாம்! தள்ளாடியிலே கடற்கரை யிருக்கின்றது. அக்கடல் ஆழங் குறைந்த வற்றிப்பெருகும் பரவைக் கடலேயாயினும் 'கடல்' என்பதில் யாருக்கும் சந்தேகமோ கருத்து வேற்றுமையோகிடையாது. கடலே தான்.

நெய்தல்நிலமான தள்ளாடியிலே கடற்கரையிலிருந்து சுமார் நூற்றைம்பது இருநூறுயார் தூரத்தே அமைக்கப்பட்டிருக்கும் அர்ச் அந்தோனியார் ஆலயத்திற்கு முன்பாகவொரு இயற்கையான நன்னீர்த்தடாகமிருக்கின்றது.

அந்த வாவியிலே பல்லாண்டு காலமாக வெண்தாமரை மலர்கள் குடியிருந்து மலர்ந்துமணம்பரப்பி வருவது பலபேரறிந்தவொரு பகிரங்க உண்மையாகும். 1964க் கடற்பெருக்கிற்குப் பின்பும்...

ஏன்? இன்றுங்கூட அங்கு வெள்ளைக்கமலம் உள்ளந்திறந்துசிரிக்கும் கள்ளமற்ற மலர்ச்சிரிப்பைக் கண்ணுரக் கண்டுமனமாரமகிழ்வடையமுடியும். சந்தர்ப்பங்கிட்டும் பொழுது எவருமே பார்த்துக் கொள்ளலாம். முடியுமாஞல் சென்று பார்த்துக் கொள்ளுங்கள்!

# ஆரோக்கியப் பேரீச்சை

(IV-ம் பக்கத் தொடர்ச்சி)

மேல்தோலை அகற்றுவதற்கு வெந்நீரில் சிறிதுநேரம் போட்டதன் பின்னர் சுலபமாக உரித்து எடுத்துவிடலாம். அதன் பின்னர் பழத்தை அதிகமாக உண்ணுங்கள்.

## பேரீச்சம்பழத்தின் குணச்சிறப்பு

வெப்பகற்றி, குளிர்ச்சியுண்டாக்கி, மலமிளக்கி, கோழையகற்றி, பசிதீய்த்தூண்டி.

## பேரீச்சம்பழ வடகம் செய்யும் முறை

பழங்களைப் பிளந்து விதையை நீக்கி அதற்குள் சுக்கு-மாம்பருப்பு - கசகசா-வகைக்கு 1 பலம் எடுத்துத் தூள் செய்து சீலை மண் செய்து புடம்போட்டுச் சீலையைநீக்கி அரைத்து மிளகளவு உருண்டை செய்து தினம் 2 முதல் 3 உருண்டை வீதம் நாளொன்றுக்கு 2 வேளை கொடுக்க, குருதிக் கழிச்சல்நொடிவிட்டகலும்.

## பேரீச்சம்பழத்தால் மாறும் வியாதிகள்

பேரீந்தெனுங்கனிக்குப்
பித்தமத மூர்ச்சைசுரம்
நீராந்த ஐயம்
நெடுந்தாகப்-பேரா
இரத்த பித்த நீரிழிவு
லைப்பறும் அரோசி
உரத்தமலக்
கட்டுமறும் ஓது

நீரைச் சுரப்பிக்கின்ற பித்தம்-மூர்ச்சை சுரம் நீர்க்கோவை - நீர் வேட்கை- இரத்தபித்தம் - மதுமேகம்- வாயிளைப்பு - அரோசகம்- மலபந்தம் ஆகியவைகளைக் கண்டிக்கும். இதையுணர் வைத்தியர்கள் அதிகமாக உபயோகிப்பார்கள்.

குழந்தைகளுக்கு ஒவ்வொரு நாளும் காலை மாலை பேரீச்சம்பழத்தின் விதையை நீக்கி அதைத் தேனில் ஊறவிட்டு நாளும் கற்ப முறையில் கொடுத்து வருவோராயின் மாரடைப்பு -இருமல்-வாய்வு நீங்குவதுடன்-மலக்கட்டு நீங்கி மேனி அழகுபெற்று நோயின்றி வாழலாம்.

இத்தகைய குணங்களையுடைய பேரீச்சம்பழத்தை நாளொன்று 5-8 அவுன்ஸ் வீதம் சாப்பாட்டுடன் கலந்து உண்ணவும்-இவைகள் அதிக விலையற்றதாயிருப்பதுடன் எப்பொழுதும் எங்கும் பெறக்கூடியவையுமாகும்.

பேரீச்சமரத்தின்பழங்களைவிடஅவற்றின் தண்டில் பின்னும் பாய்களில்படுத்துறங்குபவர்களுக்கு வாதகுன்மம்-சோபை நீங்கும். பசி, பாண்டு-காமாலை- முதலியனவற்றை அடியோடு நீக்கும் தன்மையுமுடையது.

பேரீச்சுப் பர்யினிதம்
பேரா துறங்குவர்க்குப்
பாரித்த குன்மம் பறக்கு
மென்பார்-பூரித்த
வீக்கமறுந்திபனமா
மெய்யை வெளுப்
போருஷ்ணம்
ஆக்கிவிடு மென்றறி
என்று கூறியுள்ளார்கள்.

# உங்கள் இராசி பலன்

எழுதுவது

சோதிட ஆசான் செ. தெல்லியூர்

Colombo Studio

[25-6-66 – 1-7-66]

### மேட இராசி

களத்திரசுகம், குடும்பத்தில் ரோக பீடை, சந்தோஷம், மாதாவழி உதவி, பொருள்வரவு-சத்துரு வெற்றி, இனசனக் கூட்டம், வீண்அலைச்சல், அதிகார சித்தி, உத்தியோகச்சிறப்பு.

### இடப இராசி

பொருள் இலாபம். பிணியிஞல் செலவு அதிகரிப்பு, இனசன விரோதம், மனப்பயம், புத்திரமகிழ்ச்சி, பயன் அற்றபிரயாசம், செய்காரிய நட்டம். சகோதர நன்மை.

### மிதுன இராசி

ரோகபீடை, மனக்குழப்பம், இனசன விரோதம் செய்காரிய தாமதம், வாக்குக் கலகம், பணமுடை, பிறருக்கு அனுவசியமாகக் கட்டுப்படல், அபகீர்த்தி.

### கடக இராசி

மரணபயம், மனச்சஞ்சலம், பிரயாணகஷ்டம், தொழிற்குறைவு, சத்துரு வெற்றி, பழிச்சொற்கேட்டல், அதிகபிரயாசம், செய்காரிய நட்டம், அவமானம்.

### சிங்க இராசி

தேகஅசௌக்கியம், பொருள் வரவு, நன்மை விருத்தி, அபகீர்த்தி. செலவு அதிகரிப்பு, பெரியோர் நட்பு, வாக்குக்கலகம், களத்திரவழி சுகக்குறைவு, பிரயாணக்கஷ்டம்.

### கன்னி இராசி

சந்தோஷம், சகோதரவழி உதவி, செய்காரிய நட்டம், பிதாவழித் தொல்லை, சரீர மெலிவு, அலைச்சல், வித்தை விருத்தி, நிலைப் பிரிவு, பந்துக்கள் உதவி.

### துலா இராசி

சுகபோசனம், மரண பயம், எதிர்பாராதஆபத்து, ரோகபயம், சத்துரு ஆயுத பயம், சஞ்சலம், தொழிற் கேடு, குடும்பசுகம், ஸ்திரீ பீடை.

### விருச்சிக இராசி

பணமுடை, ரோகபீடை, வைத்தியச்செலவு அதிகரித்தல், கடன்படல், குடும்ப கலகம், செய்காரிய விக்கினம், பிறருக்கு அனுவசியமாகக்கட்டுப்படல், துட்டர் உறவு, சஞ்சலம்.

### தனு இராசி

புத்திர விருத்தி, ரோக பீடை, மனக்கவலை, பயம், பெண்சுகம், வயிற்றில் ரோகம், களத்திரசுகம், மனத்தில் தாழ்வுநிலை, எதிர்பாராதவழி பொருள்வரவு.

### மகர இராசி

சத்துருவெற்றி, குடும்பத்தில் ரோகபீடை, இனபந்துக்கள் கூட்டம், விரோதம், தேகநலிவு, கொடுக்கல்வாங்கல் கஷ்டம், புத்திரரால் தொல்லைகள்.

### கும்ப இராசி

நிலைகேடு, இனபந்துக்களின் கவலை, புத்திரர் தொல்லை, இரத்த சம்பந்தமான ரோகபீடை: செய்காரிய சித்தி, வஸ்திராபரண லாபம், அதிகார விருத்தி, மாதாவழிவிரோதம்.

### மீன இராசி

அதிகாரவிருத்தி, இனசனப்பகை, செய்காரியத்தடை, பொருள்வரவு, ரோகபீடை, செலவு, மாதுருவழி, குடும்பகலகம், பந்துக்கிலேசம்,

# தெரிந்து கொள்ளவும்

திரட்டு: என். எஸ் .கே.

○ பழையஎகிப்தியரின் ஹிரோகிளிபிக்ஸ் என்னும் ஓவிய எழுத்தை வாசிக்கக் கண்டுபிடித்தவர் சம்போலியன் (ChamPollian) என்னும் பிரான்சியர் (1790-1832.)

○ கிரேட்பாஸ் (Great bass) வெளிச்ச வீடு பிரிட்டிஷாரால் 1870-ல் கட்டப்பட்டது. மிக்கி, வில்சன் (Mike, wilson) என்பவர்கள் கடலின் அடியைச் சுளியோடி ஆராய்ந்தார்கள். அங்கு இரண்டு பீரங்கிகளும் வெளிநாணயங்களும் காணப்பட்டன. நாணயங்கள் 1702-ல் அடிக்கப்பட்ட சூரத் ரூபாய்கள். வெள்ளி நாணயங்களின் எடை 120 ருத்தல். இங்கு ஒரு கப்பல் உடைந்து ஆழ்ந்துபோனதாகத் தெரியவந்தது.

○ உலகைமுதல்முதல்கடல் வழியாகச் சுற்றிவந்தவர் மாகெலன் (Magellan) என்னும் போர்ச்சுக்கிசிய மாலுமி(1480-1521). இவர் 1519-ல் புறப்பட்டார். இவர் கொண்டு சென்ற உணவுப் பொருள்கள்: 21,383 ருத்தல் பிஸ்கோத்து, 1,120 ருத்தல் சீஸ், 200 பீப்பாய் சார்டின் மீன், 238 டசின் கருவாடு, 370 ரூத்தல் உப்பிட்ட மாட்டிறைச்சி, 480 ருத்தல் எண்ணெய், 1,700 ருத்தல் மீன், 21/2 தொன் வெடி மருந்து பெருமளவினவாகிய தானியம், அவரை, பயறு, மா, தேன், வெங்காயம், அத்திப்பழவற்றல், உப்பு. புறப்பட்டவர்கள் 260பேர்; மீண்டவர் 184 பேர். கப்பல் மீண்டது 1522-ல். மாகெலன் பிரயாணத்தில் இறந்துபோனுன்.

○ ஒட்டகப் பறவை- ஒட்டகத்தைப்போல் பல நாட்கள் நீரின்றி வாழக்கூடியதாதலின் தீக்கோழி ஒட்டகப் பறவை எனப் பெயர் பெறும். தீக்கோழி ஒரு முறையில் ஒன்றரைக் கலன் நீரைக் குடிக்கும்.

○ மயிர்க்குட்டிப்புழு என வழங்குவதை, மயிர்கொட்டிப்புழு என வழங்குகிருர்கள். சிவஞான சித்தியார் என்னும் தமிழ் நூலில் மயிர்க்குட்டி என்னும் சொல் ஆளப்பட்டுள்ளது.

○ புடைவை என்னும் சொல்லை, புடவை எனப் பலர் வழங்குகிருர்கள். இது பிடவை எனவும் சிலரால் வழங்கப்படுகிறது. புடைவையென்பதே திருத்தமான சொல்.



முதல்தேவ நற்கருணைபெற்ற இச்சிறுமி, எதிர்காலத்தில் தாம் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து பெரும் புகழும்பெற விரும்பி ஆண்டவரிடம் நற்கருணையுடன் நல்லாசி பெறும் சாயலில் இங்கு காட்சி தருகிருர்!

படம்: லீலா ஸ்டுடியோ

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org